முத்து 15 வாரப்பத்திரிகை 8-1-39

# பாரத மணி

ஆசிரியர்: கே. எஸ். வேங்கடரமணி



முக்கிய விஷயங்கள்.


| | |
|---|---|
| திண்ணையில் | —ராவ் சாகேப் கே. சுப்ரமண்யம் |
| அம்மாவின் யோசனை | —"குகப்ரியை" |
| சிறுவன் மனம் | —கவிதை |
| சுதேசிப் பொருட் காக்ஷி | —"வஸந்தன்" |


பாரதமணி காரியாலயம், 17-18, பிராட்வே, சென்னை

தனிப்பிரதி — ஒரு அணா (32 பக்கங்கள்) வருஷ சந்தா ரூ. 3.

THE BHARATAMANI
17-18, Broadway, Madras.

Editor:
K. S. VENKATARAMANI

ஞாபக மிருக்கட்டும்!

## அய்யனூரும் பிதாவும்!

இந்த இயந்திர யுகத்தில் எப்பொழுதும் மனுஷ்யனின் உயிருக்கு ஆபத்துத்தான்.

# ஹிந்துஸ்தான்

கோவாபரேடிவ் இன்ஷ்யூரன்ஸ் ஸொஸைடி, லிமிடெட்,
எதிர்பாராத விபத்து, அங்கஹீன சலுகைத்
திட்டத்தின் கீழ்

பாலிஸியின் மதிப்பை விட

## மூன்று பங்கு

அதிகமாகவே கொடுக்கிறது.

| | | |
|---|---|---|
| புது 'பிஸினேஸ்' (1937—38) | ரூ. | 3 கோடிக்குமேல் |
| மொத்த நடைமுதல் 'பிஸினேஸ்' | ரூ. | 14,60,97,294 |
| மொத்த சொத்துக்கள் | ரூ. | 2,97,30,211 |
| கொடுபட்ட மொத்த கிளேம்கள் | ரூ. | 1,40,00,000 |

விபரங்களுக்கு:—பிராஞ்சு மானேஜர்,

'ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்'

அரண்மனைக்காரன் தெரு, சென்னை.

# பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"—பாரதி


ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.

| மாலை 1 | ஞாயிறு 8-1-39 வெகுதான்யஹு மார்கழிமீ 24உ | முத்து 15 |
|---|---|---|

## பொருள் அடக்கம்


| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| 1. சோதனைக் காலம் | .... | 362 |
| 2. குறிப்பு | ... | 364 |
| 3. போகிற போக்கில் | ... | 366 |
| 4. வாரச் செய்திகள் | ... | 368 |
| 5. சங்கீத வித்வத்சபை | ... | 369 |
| 6. திண்ணையில் (ராவ்சாகேப் கே. சுப்ரமண்யம்) | .... | 373 |
| 7. மந்திரிகளுக்கு விண்ணப்பம் (ஸ்ரீ. டி. எஸ். ரமணி) | ... | 377 |
| 8. அம்மா யோசனை "துகப்ரியை" | ... | 378 |
| 9. கிராமம் திரும்புதல் (ஸ்ரீ. டி. வி. ராமமூர்த்தி) | ... | 381 |
| 10. கெட்டிக்காரத்தனம் (ஸ்ரீ. ஆ. வே. ஜெயராமன்) | ... | 384 |
| 11. சுதேசிப் பொருட்காட்சி "வஸந்தன்" | ... | 385 |
| 12. பாவதேவதையின் சரக்கு (ஸ்ரீ. பெ. நா. அப்புஸ்வாமி) | ... | 386 |
| 13. சிறுவன் மனம் (ஸ்ரீ. கு. பா. வேங்கடாசலம்) | ... | 387 |
| 14. தெருப்பாடகன் (ஸ்ரீ. ரா. ஆறுமுகம்) | ... | 388 |
| 15. வலை வீச்சு | ... | 389 |
| 16. புத்தக விமர்சனம் | ... | 392 |


"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள். ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.



# சோதனைக் காலம்

ராஜபாளையத்தில் போன வாரம் நடைபெற்ற தமிழ் மாகாண மகாநாடு நாட்டின் ஒரு சோதனை சமயத்தில் கூடிற்று.

நாட்டில் காங்கிரசிற்கு ஏற்பட்டிருக்கும் செல்வாக்கையும் அதிகாரத்தையும் கண்டு பொறுமி, எதிரிகள் தங்கள் அசுர குணங்களைக் காட்ட ஆரம்பித்து, ஜனங்களிடையே ஜாதித் துவேஷத்தையும் வகுப்பு வாதத்தையும் அதிகரிக்க என்னென்ன செய்யலாமோ எல்லாம் செய்து வருகிறார்கள். ஜஸ்டிஸ் கட்சி சிதைந்த சில அங்கங்களை சென்னையில் ஒன்றுகூட்டி மறுபடியும் தலை தூக்க முயற்சி செய்கிறது; ஆரியர்—திராவிடர் என்ற ஒரு அசட்டுப் பூசலைக் கிளப்பி அதை ஊன்றுகோலாகக்கொண்டு நடமாடலாம் என்ற வீண் ஆசை கொண்டு வீறிடுகிறது. ஹிந்தி எதிர்ப்பு என்ற ஒரு அகத்திக்கழியைக் கொண்டு காங்கிரஸ் மந்திரி சபையைத் தாக்கலாம் என்று நினைக்கிறது. அதன் எண்ணங்கள் நடைபெருவென்பது நிச்சயம். ஆனால் மக்களிடையே அது செய்யும் பிரசாரம் விஷமமானது. ஒன்றும் தெரியாதவர்கள் அவர்கள் பிதற்றலை வாஸ்தவம் என்று நம்பிவிட்டால் நாட்டில் கலவரம் ஏற்பட்டுவிடும். இந்த நிலைமையை காங்கிரஸ் திறமையாகவும் அழுத்தமாகவும் சமாளிக்கவேண்டியது ஒரு பெருத்த பொறுப்பு. முஸ்லீம் லீக்கின் கிளர்ச்சியும் பிற்போக்கும் அதனுடைய தலைவரின் அதிக்கிரமப் பேச்சும் காங்கிரஸ் வேலைக்குப் பெரும் இடைஞ்சலாக இருக்கிறது. எடுத்ததற்கெல்லாம் ஆட்சேபணை, எதிர்ப்பு, வசை; சிறுபான்மைக் கட்சி யென்று சலுகைகளைச் சாக்காக வைத்துக்கொண்டு நாட்டில் பிளவு ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார் ஸ்ரீ ஜின்னா. ஹிந்து-முஸ்லீம் பிரச்னையைத் தீர்ப்பதற்கு ஒருவிதமான ஒத்தாசையும் செய்யாமல் விஷமம் செய்கிறார். துர்ப்பாக்கிய வசமாக அவர் போக்கால் காங்கிரஸ் முஸ்லீம் லீக்குடன் நடத்திய பேச்சுகளைக் கூட நிறுத்த வேண்டியதாகி விட்டது. இதற்கு மத்தியில் ஹிந்து மகா சபை பாட்டிற்கு கண்மூடித்தனமாக காங்கிரசைத் தாக்கிக்கொண்டு வருகிறது.

இந்த சமயம் பார்த்து ஆங்கில ராஜ தந்திரிகள் சமஷ்டியை இந்தியாமீது சுமத்தி விட வேண்டுமென்று முனைந்து விட்டார்கள். இந்தியா சட்டத்தில் ஒருவிதமான மாறுதலும் செய்ய முடியாதென்று சொல்லி விட்டார்கள். அதன் காரணமாக ஏற்படப்போகும் போராட்டத்தின் பூரா சிசுமையும் காங்கிரஸின் தலையில் தான் விழும். அதுதான் அந்தப் போரை நடத்தியாகவேண்டும். முஸ்லீம் லீக்கும் லிபரல் கட்சியினரும் சமஷ்டியை எதிர்த்தபோதிலும் சமயத்தில் அவர்கள் விட்டுக் கொடுத்து விடுவார்கள். ஹிந்து மகா சபை சமஷ்டியை ஒப்புக்கொள்வதென்றே தீர்மானித்து விட்டது. ஜஸ்டிஸ் கட்சியைப் பற்றிக் கேட்க வேண்டியதில்லை.

இந்த நிலைமையில் தமிழ் நாட்டில் காலத்தில் மழை பெய்யாததால் எங்கும் விளைச்சல் அற்றேபோயிற்று என்று சொல்லலாம் போல நெருக்கடி ஏற்பட்டுவிட்டது. பஞ்சம் வந்து விடுமோ என்ற நிலைமை திடீரென்று தோன்றிவிட்டது. இதுவும் காங்கிரஸிற்கு ஒரு சோதனை. ஏற்கனவே மதுவிலக்கால் ஏற்பட்ட வருமானக் குறைவால் சர்க்காரின் நிதி நிலை நெருக்கடியாக இருக்கிறது. இதில் பெருவாரியான நிலத்தீர்வைத் தொகையை வஜா செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டால்?

ராஜபாளையத்தில் கூடிய மகாநாடு இந்த நிலைமையை நன்றாக அறிந்து அதற்கேற்ற

வாறு மக்களுக்கு ஊக்கம் ஊட்டும்படியாகவும், சர்க்காருக்கு யோசனைகள் கூறும் முறையிலும், ஆதரவு அளிக்கும் நோக்கத்துடனும், முக்கியமான தீர்மானங்களை நிறைவேற்றி யிருக்கிறது.

மகாநாடே காங்கிரஸின் செல்வாக்கைக் காட்டும் ஒரு கண்கூடான காட்சியாக இருந்தது. மாகாணத்தில் மந்திரி சபையிடம் பரிபூரண நம்பிக்கை இருக்கிறதென்பது மகாநாட்டின் மூலம் வெளியாயிற்று. ஹிந்தி எதிர்ப்பையும், ஜாதித் துவேஷப் பிரசாரத்தையும் கண்டித்து தீர்மானங்கள் நிறைவேறின. காங்கிரஸ் சர்க்கார் இயற்றிய எல்லாச் சட்டங்களையும் மகாநாடு நாட்டின் நலத்திற்கேற்றவை என்று போற்றி ஆதரவு அளித்தது.

சமஷ்டியை நிராகரிக்க வேண்டுமென்ற ஹரிபுராத் தீர்மானத்தை மகாநாடு ஊர்ஜிதப் படுத்திற்று. சமஸ்தானங்கள் தாராள புத்தியுடன் தங்கள் பிரஜைகளுக்கு உரிமைகள் அளிக்க வேண்டும் என்றும் மகாநாடு வற்புறுத்திற்று. ராஜ் கோட்டில் ஏற்பட்ட வெற்றியைக் குறித்து சர்தார் பட்டேலையும் சமஸ்தானாதிபதியையும் வாழ்த்தி மற்ற சமஸ்தானங்களும் அவரைப் பின்பற்ற வேண்டுமென்று மகாநாடு எச்சரிக்கை செய்தது. சர்தாரின் வெற்றி காங்கிரஸின் வெற்றி. நாட்டில் காங்கிரஸிற்கு இருக்கும் வல்லமைக்கு அது சூசகம்.

தமிழ் நாட்டில் ஏற்பட்டிருக்கும் பஞ்ச நிவாரணத்திற்காக சர்க்கார் விவசாயிகளுக்கு நிலவரி வஜா கூடிய வரையில் செய்தும் இதர வழிகளிலும் உதவிபுரிய வேண்டும் என்று மகாநாடு சர்க்காரைக் கேட்டுக்கொண்டது. பொது ஜனங்களும் சர்க்காருடன் ஒத்துழைத்து விவசாயிகளுக்கு உதவிபுரிய வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஜனங்களின் கல்வி யின்மையை ஒழிக்க படித்தவர்கள் எல்லோரும் முனைந்து ஒரு இயக்கம் நடத்த வேண்டும் என்றும் ஆரம்பக் கல்வியை வர்தா திட்டப்படி உடனே சீர்திருத்தி அமைக்க வேண்டும் என்றும் இரண்டு முக்கியமான தீர்மானங்கள் நிறைவேறின.

மகாநாட்டில் நிறைவேறின தீர்மானங்கள் எல்லாம் நடைமுதலில் வருவதற்கு மாகாண காங்கிரஸ் கமிட்டி நடக்கும் வருஷத்தில் பெரும் பாடுபட வேண்டும். பொதுஜனத் தொடர்பை கிராம சபைகள் மூலம் இன்னும் அதிகப்படுத்த வேண்டும் தொண்டர்கள் தான் சில வேலைகள் செய்ய வேண்டும் என்று இருக்காமல் காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்களும் காங்கிரஸ் சட்டசபை அங்கத்தினர்களும் சேர்ந்து மகாநாட்டின் பிரதிக்ஞைகளை நிறைவேற்றி வைக்க வேண்டும்.

நெருக்கடியை சமாளிப்பதே பெரிய வேலைதான்; ஆனால் காங்கிரஸ் தன் வேலையை அதில்மட்டும் செலுத்திக் கொண்டிருக்க முடியாது. பல திக்குகளிலும் கிடக்கிற வேலை தலைக்குமேல் இருக்கிறது. மந்திரி சபையோ, மாகாண காங்கிரஸ் கமிட்டியோ, சட்ட சபை அங்கத்தினர்களோ தனித்தனியாக ஒன்றையும் சாதித்துவிட முடியாது. வேலை பூராவிற்கும் ஒரு முழு திட்டம் போட்டு ஒத்துப் பார்த்துப் பிரித்துக்கொள்ள வேண்டும். சர்க்கார் நிர்வாகத்தில் இருப்பதுபோல காங்கிரஸ் வேலையில் இலாக்காக்கள் இருக்க வேண்டும்.

வருகிற வருஷத்தில் காங்கிரஸ் இதையெல்லாம் செய்ய வேண்டும்; செய்து முடிப்பதற்கு அதற்கு வேண்டிய அளவு சாதனங்கள் இருக்கின்றன. முதலாவதாக இணையற்ற கட்சிக் கட்டுப்பாடு இருக்கிறது. அன்னிய நாட்டார்கூட பார்த்துப் புகழும்படியான அரசியல் திறமையும் இருக்கிறது; காந்திஜியின் அருளால் சக்தியும் ஊக்கமும் இருக்கிறது. அவருடைய உதவியும் யோசனையும் இருக்கிறது. வேறென்ன வேண்டும்?

சாதனங்களை நன்றாகப் பயன்படுத்திக் கொள்ளும் சிரத்தை காங்கிரஸ்காரர்கள் எல்லோருக்கும் இருக்க வேண்டும்.

நடவடிக்கைகளில் தூய்மை வேண்டும். உண்மையான தியாக புத்தி வேண்டும். காந்திஜி வேண்டும் சத்தியம் வேண்டும்.

குறிப்பு

# நமக்கொரு படிப்பினை

ஹிட்லரின் முறைகளைக் கண்டிக்கிறோம். சிறு நாடுகளை அவர் துவைத்து மிதித்து ஜெர்மனியுடன் சேர்த்துக்கொள்ளும் அதிக்கிரமத்தைக் கடுமையாகக் கண்டிக்கிறோம். அவருடைய லட்சியங்களைக்கூட உலக அமைதிக்கு விரோதமெனத் தாக்குகிறோம்.

ஆனல் ஹிட்லருடைய நிகரற்ற ஜீவிய சரித்திரத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டிய படிப்பினைகளும் இருக்கின்றன. அவருடைய தியாகமும் ஆழ்ந்த தேசபக்தியும் சரித்திரததிற்கே ஒரு ஆதர்சமாக இருக்கின்றன.

ஒரு மனிதனல் ஒரு தேசத்திற்கு என்ன செய்யக் கூடும் என்பதற்கு கெமால் அதாதர்க்குக்கு அடுத்தபடியாக ஹிட்லரின் 'ஆட்சி' ஒரு கண்கூடான உதாரணம். தீவிர நோக்கமும் பிடிவாத குணமும் விடா முயற்சியும் கொண்டு, ஹிட்லர் தனது சுய சரிதையில் ஜெர்மன் அபிவிருத்தியைப்பற்றிப் போட்ட திட்டத்தில் ஒவ்வொரு அம்சமாக நிறைவேற்றிக்கொண்டே வருகிருர்.

1938-ம் வருஷத்தின் வேலையைப் பரிசீலனை செய்து அந்த வருஷத்தில் ஜெர்மனிக்கு மகத்தான பலன்கள் ஏற்பட்டிருக்கின்றனவென்று அகமகிழ்ந்து கடவுளையும் கட்சியையும் போற்றுகிருர். தனது நடத்தையில் தனக்கு ஜெர்மன் பிரஜைகள் பரிபூர்ண ஆதரவுகொடுத்து ஜனநாயக நாட்டுத் தலைவர்களுக்கும் ஒருகைமேலாகத் தன்னை ஜனங்களின் பிரதிநிதியென்று நிலைநாட்டினதற்காக அவர்களைப் போற்றுகிருர்.

1939-ம் வருஷத்திற்கு ஒரு திட்டமும் போட்டுவிட்டார். முதலாவதாக நாட்டு மக்களை ஒரு தேசீய அபேதவாத ஐக்கியத்துவத்தில் ஒன்றுபடுத்தவேண்டும். இரண்டாவதாக யுத்த பலங்களை அதிகரித்து திறங்கொள்ளச் செய்யவேண்டும். மூன்ருவதாக ஒரு நான்கு வருஷ அபிவிருத்தி திட்டத்தை ஆரம்பித்து புது ரீச் பிரதேசங்களை ஜெர்மனியில் பொருளாதார வகையில் இணைக்கவேண்டும்.

இந்தமாதிரி தீவிரத்துடனும் துடியுடனும் தயக்கமின்றி நாம் என்று அபிவிருத்திப் பாதையில் போக ஆரம்பிக்கப்போகிறோம்? காந்திஜியை என்று நாம் பூர்ண ஆதரவு கொடுத்து இந்த வேலையில் ஈடுபடச் செய்யப் போகிறோம்?

## விசுவ ரூபம்

நமது பிரதம மந்திரி ராஜபாளையத்தில் ஒரு எச்சரிக்கை கொடுத்தார். காங்கிரஸின் பலம் கொஞ்சம் தளர்ந்ததுபோன்ற ஒரு நிலைமைக்கு நாட்டில் அறிகுறிகள் இருக்கின்றன. பல கட்சிகள் பல காரணங்களைக்கொண்டு தலைவிரித்தாடுகின்றன. ஜஸ்டிஸ் கட்சி ஒருபுறம் நூதனமான ஆரியர் திராவிடர் என்ற ஒரு பூசலைக்கிளப்பி ஜாதி துவேஷப் பிரசாரம் செய்கிறது; முஸ்லீம் லீக் ஸ்ரீ ஜின்னவின் தலைமையின்கீழ், காங்கிரஸ் ஹிந்து ஸ்தாபனமென்றும் அது சிறுபான்மையோரான முஸ்லீம்களை நசுக்குகிறது என்றும் விஷமப் பிரசாரம் செய்கிறது; ஹிந்து மகா சபை ஒருபுறம் மிகவும் பிற்போக்கான ஹிந்து மதவாதத்தைக் கிளப்பிக் கூச்சலிடுகிறது. இவற்றின் நடுவே காங்கிரஸின் கர்ஜனை ஓய்ந்திருக்கிறது. அது காங்கிரஸின் பலஹீனத்தால்தான் என்று எதிரிகள் எளிதாகப் பிரசாரம் செய்வார்கள்.

காங்கிரஸ் மறுபடியும் தனது விசுவரூபத்தைக் காட்டவேண்டும் என்கிருர் பிரதம மந்திரி. அந்த விசுவரூபத்தை எப்படிக் காட்டுவது? ஒரு சந்தர்ப்பம் வேண்டுமல்வா? ஈசுவரன் அருளால் சமஷ்டி எதிர்ப்பு அதற்கு ஒரு சந்தர்ப்பமாக ஏற்பட்டிருக்கிறது. நாடு சீறி எழவேண்டும். காங்கிரஸ் எல்லையற்ற வலிமை கொண்டது என்பதை பகைவர்கள் கண்டுணர்ந்து கலங்கவேண்டும்.

சென்னையில் சென்ற ஞாயிற்றுக் கிழமை தீவிரமாக அந்த வேலை ஆரம்பித்து ஸ்ரீ எஸ் சீனிவாச அய்யங்காரும் பிரதம மந்திரியும் விசுவரூப தரிசனக் காட்சியைத் துவக்கிவிட்டார்கள். நாடெங்கும் எதிர்ப்பு அலைகள் பொங்கி வரவேண்டும். ஜனங்கள் அபிப்பிராயத்திற்கு விரோதமாக இந்தியாவின்மேல் ஒரு அரசியல் அமைப்பை பார்லிமெண்ட் திணிக்க முடியாதென்பதைக் காட்டவேண்டும்.

## சிறுபான்மையோர் வாக்கு

ஸர் பன்னீர் செல்வம் ஒரு புறமும் ஸ்ரீ ஜின்ன ஒரு புறமும் ஸ்ரீ சவர்க்கார் ஒரு புறமுமாக காங்கிரஸின்மேல் பாய்ந்து கொண்டிருக்கும்பொழுது சென்னையில் சென்ற வாரம் கூடிய அகில இந்திய கிருஸ்துவ மகாநாடு

காங்கிரஸின் நோக்கங்களையும் போக்கையும் ஆதரித்து காங்கிரஸுடன் தொடர்பு வைத்துக்கொள்ள கமிட்டியும் நியமித்திருப்பது மிகவும் சந்தோஷத்திற்குரிய விஷயமாகும்.

டாக்டர் முகர்ஜி தன் தலைமையுரையில் காங்கிரஸைக் கிருஸ்துவர்கள் ஆதரிக்க வேண்டியதின் அவசியத்தை வற்புறுத்திக் கூறினர். கிருஸ்தவர்கள் வகுப்பு வாதத்தைக் கண்டிப்பதாகவும் வகுப்புவாரித் தேர்தல் தொகுதிகளையே எடுத்துவிடலாம் என்றும் தீர்மானங்கள் நிறைவேறின. மதுவிலக்கு திட்டத்தை ஆதரித்தும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### ஸ்ரீ. ராமன் மேனன்

செவ்வாய்க்கிழமை இரவு மந்திரி ராமன் மேனன் காலமானர் என்ற செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமடைகிறோம். ராமன் மேனன் விஷயத்தில் இது மரியாதைக்காகச் சொல்வதல்ல. அவருடைய அரிய சேவைகளாலும் மந்திரி பதவியில் அவர் செய்த மனப்பூர்வமான வேலையாலும் அவரிடம் நமக்கு உண்மையான அபிமானம் ஏற்பட்டு விட்டது.


ராமன் மேனன் தேறின தேசாபிமானி; ஸரவி; உழைப்பாளி; ஊக்கமும் சிரத்தையும் கொண்டவர். நேர்மை கொண்டவர். அவருடைய ஸ்தானத்தைப் பூர்த்தி செய்வது கடினம் தான். இந்த நெருக்கடி சமயத்தில் அவர் இறந்து விட்டது பிரதம மந்திரிக்கு நஷ்டம், மந்திரி சபைக்கு நஷ்டம் நாட்டிற்கே நஷ்டம்.

---

# சொல்வதும் செய்வதும்

(சென்ற வாரம் ஜஸ்டிஸ் கட்சி மகாநாட்டில் பிரசங்கிகளிடமிருந்து உதிர்ந்த முத்துக்களையும் ஆனல் அங்கே நடந்த வைபவங்களையும் சிரிக்காமல் படிக்கவும்.)

| சொன்னது | நடந்தது |
|---|---|
| "நாங்கள் ஸ்வராஜ்யம் வேண்டாமென்று சொன்னோம்?" | ஆனல், அங்கே பறந்து கொண்டிருந்தது யூனியன் ஜாக்! |
| "தமிழ் வாழ்க. ஹிந்தி ஒழிக." | ஆனல் முக்கால்வாசித் தலைவர்கள் ஆங்கிலத்தில் பிளந்து கட்டுகிருர்கள்! |
| "பார்ப்பனர் ஒழிக." | ஆனல் 'பரவஸ்து' மட்டும் ஒரு விரும்பக்கூடிய வஸ்து! |
| "தமிழ்நாடு தமிழருக்கே. வேறு ஒருவருக்கும் இங்கே இடமில்லை." | ஸர் பாத்ரோ, மிர்ஸாபுரம் ஜமீந்தார் ஸ்ரீ அப்பாராவ்—இவர்களெல்லோரும் தமிழர்கள். 'தமிழருக்கு' முன் மேடைமீது வந்து பேசக்கூட இவர்களுக்கு இடமுண்டு. |
| "பார்ப்பனர் திராவிடரல்ல." | ஸ்ரீ. கலிபுல்லா, தாவுத்ஷா முதலிய முஸ்லீம் தோழர்கள் திராவிடர்கள்! |
| "உஷ்! பலாத்காரமே கூடாது. கண்ணியமாக நாம் போராட வேண்டும்." | ஆனல் மறுநாள் கடற்கரைக் கூட்டத்தில் பிரதம மந்திரியின் பேரில் கல்லை விட்டு எறியலாம்! |




உண்மையிலே போகிற போக்கில்தான் இந்தவாரம்! மறுபடியும் சகடயோகம். ரயிலோட்டம் எனக்கு நேர்ந்துவிட்டது. வழக்கம்போல் கண்ணிலும் காதிலும் மூக்கிலும் நிலக்கரியோகம். ராஜபாளையத்தில் நடக்கும் அரசியல் மகாநாட்டுக்கு நான் போகாமலிருக்கலாமா? விஷயங்களை நேரில் தெரிந்துகொண்டு எழுதவேண்டியது ஆசிரியரின் கடமையல்லவா? தவிர வரவேற்புக் கமிட்டித் தலைவர் ஸ்ரீ குமாரஸாமி ராஜா என் பழைய நண்பர்—ராஜபாளையத்தில் எல்லோரும் ராஜாக்கள் தான்—செயலும், குணமும் மீசையும் அப்படியே தான். தவிர, ராஷ்ட்ரபதி சுபாஷ்போஸ் ராஜபாளையம் வருகிறாரல்லவா? இந்தத்தடவையுமா தமிழ் நாட்டை ஏமாற்றப் போகிறார்! ஒருக்கால் ஒரே மேடையிலேயே நானும் அவரைச் சந்தித்தாலும் சந்திக்கலாமே! இந்த அதிர்ஷ்டத்தை கூவக்கரையில் பிராட்வேயிலிருந்து இழப்பானேன்?

நமக்கு நம்மடவர்களென்றால் புழக்கடைப் பச்சிலை! காசி வடதேசமல்லவோ! வடஇந்திய வீரர்களின் தரிசனத்திற்கே நாம் நூறுமைல் கால் நடையாக நடந்து போகத் தயாராக விருக்கிறோம்—ஒரு சிட்டி மூக்குப் பொடி இரவல் வாங்கிப் போட்டு அனுபவிக்க ஒருமைல்கூடப் போகத் தயாராக இருக்கும் சாந்தமும் குணமுமுள்ள நமக்கு இந்தப் பெரிய விஷயத்தில் இது ஓர் லக்ஷியமா?

* * * *

ஆனால் ராஷ்டிரபதி மறுபடியும் நம்மை ஏமாற்றிவிட்டார்! திரள்திரளான கூட்டங்கள் ராஜபாளையம் வந்து ஏமாந்தன. ஆனால் ரயில்காரன்தான் ஏமாறவில்லை. பதினைந்து ரூபாய் டிக்கெட்டு பிட் நோட்டீஸ்போல செலாவணியாய்விட்டது! ராஜபாளையத்தில் அரசியல் மகாநாட்டுக்கு திருவிழாக் கூட்டம் கூடிவிட்டது.

* * * *

ராஜபாளையம் கண்ணுக்கு ஓர் அழகான கிராமம். கிராமத்தின்கண் சிறுகச் சிறுக அழிந்து நகரமாக ஆகிக்கொண்டு வருகிறது! மகாநாடு கூடி நிற்கும் சமயத்தில் தெருக்கள் சென்னைபோலவே இருந்தன. பிராட்வே தோற்றுப்போய்விடும். பீடி விளம்பரங்கள் தோரணந் தோரணமாய் தெருக்களில் தொங்கி வரவேற்பு செய்தன. இதைக்கண்டுதான் புகையிலைக்கு வரிபோடவேண்டுமென்ற தீர்மானத்திற்கு ராஜாஜி வந்திருக்கவேண்டுமென்று மகாநாட்டுப் பந்தலில் எனக்குத் தோன்றியது.

ராஜபாளையத்திற்கு நாலுபக்கங்களிலும் தொடர்மலைகளும் குன்றுகளும். மேற்கில் வானத்தைத்துளாவும் போடிமலைச் சிகரங்கள் மப்பால் மூடப்பட்டு மாலைபூண்ட மந்திரி மார்கள்போல் நிற்கின்றன. நான் ராஜபாளையம்வந்து ரயிலில் இறங்கியபொழுது இவ்வளவு மலைகளிருக்கிறதே, ஒரு காட்டாராவது சமீபத்திலோடும்; அதில் முழுகி ஸ்நானம் செய்யலாம் என்று நினைத்தேன். பரபரப்புடன் கேட்டேன். ராஜபாளையத்தில் ஆறு ஏது என்று பதிலளித்தார்கள். ஆரில்லாத மலை மலடிபோல்தானே என்று விசனித்தேன். மழையெல்லாம் மலைக்கு மேல் பக்கத்தில்தான் பெய்கிறதாம். கீழ் பக்கத்தில் கூழாங்கல்லும் புஞ்சைத் தீர்வையுந்தான் மிச்சம். கனம் மந்திரி பிரகாசம் இதைக்கண்டு கன்னங்கள் குழியக் களித்தார். நான் உற்றுப் பார்த்துக் கொண்டேயிருந்தேன்— ஸ்தலத்திலேயே ராஜபாளையத்திற்கு வரிவஜா செய்துஇனும் கிராமமாகச் செய்வாரா? ஆற்றுக்குப் பதி

லாக ரயில்பாதைதான் குன்றுகளைச் சுற்றி பாம்புபோல் வளைந்தோடிக்கொண் டிருந்தது.

ராஜபாளையத்தில் ஜலக் கஷ்டந்தான். ஆனால் குமாரஸாமிராஜா பாடுபட்டுச் செய்திருந்த ஏற்பாட்டில் காவேரி தீரம் தோற்றுப் போய்விடும்போலிருந்தது. இருபத்தையாயிரம் ஜனங்களுக்குவேண்டிய வசதிகளெல்லாம் மிகவும் நேர்த்தியாய்ச் செய்திருந்தார். ராப்பகலாய்உழைத்தார். முகத்தில் புன்சிரிப்பழியாமல் எவருக்கும் வரவேற்பு. எல்லாம் திருவிழாக் கூட்டம். தேருமுண்டு. 40 ஜோடி அழகிய காளைகள் கட்டின ஓர் ரதத்தில் மகாநாட்டுத் தலைவர் ஓமந்தூர் ராமஸ்வாமி ரெட்டியாரை ஏற்றி ஊர்வலம் சுற்றி வந்தார்கள். சாந்தத்துடன் கம்பீரமாய் வீற்றிருந்தார் தலைவர். பக்கத்தில் குமாரஸாமி ராஜா ராஜாபோல் உட்கார்ந்திருந்தார். ஆனால் முகத்தில் வரவேற்புக் கவலை தேங்கி நின்றது. கனம் கோபால் ரெட்டியார் ஒருநாள் முன் வந்திருந்தால், என்னைக் கேட்டால், அவரைத் தலைவர் பக்கத்தில் உட்கார்த்திவைத்திருப்பேன். ஊர்கோலம் பூர்ணஸித்தியாகி யிருக்கும். மாப்பிள்ளைக்களை கோபால் ரெட்டியார் முகத்திலிருந்து இன்னும் மாறவில்லை.

* * * *

மிகவும் சிறப்பாக அரசியல் மகாநாடு நடந்து முடிந்ததென்று நான் சொல்லவும் வேண்டுமா? நீங்கள் தினசரிப் பத்திரிகைகளில் பார்த்திருக்கலாமே? முக்கியமான தீர்மானங்கள் நிறைவேறின. ராஜாஜி வெற்றியடைந்தார். உபமான உபமேயங்களை, பூகம்பம் கூழாங்கல்லை வாரி இறைப்பதுபோல், ராஜாஜி எங்கும் வாரி இறைத்தார்—ஜெயித்தார். ஆனால் வெற்றிச் சிரிப்புக்கூடச் சிரிக்காமல் பூனைபோல சென்னைக்கு ரயிலேறிவிட்டார். நானும் பின் தொடர்ந்தேன். சிவகாசியில் ரயில், காங்கிரஸ் பாரம் தாங்காமல் தயங்கி நின்றது. "ஜே" கூவவந்த சிறு பிள்ளைகளைப் பார்த்து 1, 2, 3, கணக்கு கேட்டார். ராஜாஜி பையன்கள் ஸரியாகச் சொன்னதற்காகவும் தான் சொன்னபடி அவர்கள் கேட்டதற்காகவும் "ஸபாஷ்" என்று சொல்லி இஞ்ஜினைப்போய்ப் பார்த்துத் தான் வரும் வரையில் நிற்கச் சொன்னார். இந்தப் பிள்ளைகளுக்குக் கொஞ்சம் பெப்பர் மிண்ட் வாங்கிக் கொடுங்களென்று கேட்டுக்கொண்டேன். கொய்யாப்பழம் வாங்கிக் கொடுத்தார். சிறு பிள்ளைகள் அவைகளைத் தின்பதை நாங்கள் பார்க்குமுன் ரயில் ஊதிவிட்டது. பிரதம மந்திரியின் உபாத்தியாயத் திறமையிலே ஆழ்ந்து அமிழ்ந்தினவனாக மதுரை வருகிறவரையில் ரயிலோட்டத்தில் நின்றேன்.

* * * *

நமது மாகாண அரசியலோட்டத்திற்கு அழியாத அச்சு ஸ்ரீ முத்துரங்க முதலியாரே. அவரை நாம் ஒருநாளும் கைவிடக் கூடாது. அவரை வைத்துக்கொண்டுதான் நாம் காங்கிரஸ் தேர் ஓட்டவேண்டும். பரம சாந்தன். விநயஸ்தன். வம்பைக் காலணாவுக்கு வாங்கி அரையணாவுக்கு விற்கிறவ ரல்ல. விஷயாலோசனைக் கமிட்டியில் கூட மெம்பர்கள் பேய் பிசாசுபோலாடும் போதுகூட அவர் கூக்குரலிடுகிறதில்லை. அசையாப் பொருளாய் அகண்டு சிரித்துக் கொண்டே உட்கார்ந்துகொண்டிருக்கிறார்.

நமது அரசியல் நாடகத்தில் ஸ்ரீ அவநாசிலிங்கமும் ஸ்ரீ ஸந்தானமும் இரண்டு நக்ஷத்திரங்கள். இவர்களை டில்லியிலிருந்து நமது மாகாணச் சட்டசபைக்கு டிரான்ஸ்வர் செய்து முழுவதும் உபயோகப்படுத்தவேண்டுவது நமது முதல் கடமை. இவரிருவர்களும் ஓர் ஸரியான ஜோடி. ஸவாரிக்கும் தேவலை. பாரத்திற்கும் நன்றாய்வரும். சேற்றுக்கும் அஞ்சாது. ஸந்தானத்திற்குக் கொஞ்சம் கோரோஜனைகூட. வாலைப் படபடவென் றடித்தாலும் வேலை நன்றாய் செய்யும் மாடு. சட்டதிட்டங்களுக்கு லாயக்கு. அவநாசி லிங்கத்தோடு பூட்டிவிட்டால் கொடை யடிக்காது. ஸரியான ஸாரதிதான் வேண்டும்.

* * * *

ராஜபாளையம் எனக்குச் சொல்லிய சில செய்திகளையும், அந்த மகாநாட்டின் தீர்மானங்களிலிருந்து நான் அடைந்த சில தீர்மானங்களையும்பற்றி, அடுத்தவாரம் எழுதலாமென்று நினைக்கிறேன்.

மணி.

# வாரச் செய்திகள்

சென்ற வாரத்தோடு வருஷமும் சென்று விட்டது. அந்த வாரத்தில் நிகழ்ந்த பல உலக சம்பவங்களை எடுத்துக்கொண்டால் புது வருஷமும் பழைய குழப்பத்தை இன்னும் குழப்பி விடுமோ என்று அஞ்சும்படி இருக்கிறது.

ஸ்பெயின் போராட்டம் நின்றபாடில்லை. புரட்சிக்காரர்கள் இன்னும் சில நகரங்களைப் பிடித்திருப்பதாய் கூறப்படுகிறது. கிழக்கே சைனாவில் கோரயுத்தம் நடக்கிறது. ஜெருஸலத்திலும் அமைதி உண்டாகவில்லை.

இவ்வளவும் போதாதென்று ஜெர்மனி வருஷ ஆரம்பத்தில் மற்றொரு சிக்கலான பிரச்னையைக் கிளப்பிவிட்டிருக்கிறது, கடற்படையில் ஜெர்மனி பிரிட்டனுடன் சமத்துவம் கேட்கிறது. இந்த முயற்சி பிரிட்டனின் மகத்தான கடற்படைப் பலத்தைக் குலைக்கத்தான் என்பதில் சந்தேகமில்லை. இதனால் எவ்வளவு அனர்த்தங்கள் உண்டாகப் போகிறதோ என்னமோ?

இதற்கு முன் வாரத்தில் அமெரிக்காவுக்கும் ஜெர்மனிக்கும் சிறிது சச்சரவு ஏற்பட்டதல்லவா? இப்போது அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் மனஸ்தாபம் வளர்வதைக் காண்கிறோம். சைனாவில் அமெரிக்கர்களின் சுயேச்சைக்கும் வியாபாரத்திற்கும்ஜப்பான் இடைஞ்சல் உண்டாக்குவதை ஆக்ஷேபித்து அமெரிக்கா எச்சரிக்கை அனுப்பியிருக்கிறது. இதன் பலனும் என்ன ஆகுமோ யார் சொல்லக்கூடும்?

சென்ற வருஷத்தைப்பற்றி ராஜதந்திரிகள் என்ன நினைக்கிறார்கள் என்று பார்ப்போம். சேம்பர்லேன் நஷ்டத்தைவிட தாங்கள் அடைந்திருக்கும் லாபம் பெரிதென்றும் இனிமேல் இங்கிலாந்து பலாத்காரத்துக்குத் தலை வணங்காது என்றும் தெரிவிக்கிறார். ஹிட்லர் சொல்லுகிறார், சென்ற வருஷம் ஒரு நல்ல 'அறுவடை' என்று! இப்பொழுது வரும் காலத்தைப்பற்றிப் 'பெரியவர்கள்' என்ன நினைக்கிறார்கள் என்று நினைக்கிறீர்கள்? காண்டர்பரி ஆர்ச்பிஷப் எல்லா சங்கடங்களுக்கும் தயாராய் இருக்கும்படியும், ஆனால் எல்லா நலன்களையும் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கும்படியும் புத்திமதி கூறுகிறார். பிரஞ்சு தூதரான பிரான்காபான்ஸட் "நெருக்கடி ஒழிந்துவிட்டதென்று கூறினால் நான் உண்மையைக் கூறுபவன் ஆகமாட்டேன் என்கிறார்"

இவர்கள் எதிர்காலத்தைப் பற்றிப் பயப்படும்போது ஜெர்மனி வருஷ ஆரம்பத்தில் காலனிகளுக்கும் கப்பல் படைக்கும் அடிப்போடக் கிளம்பிவிட்டது.

இந்தியாவில் எங்கு பார்த்தாலும் மகாநாடுகளும், காங்கிரஸ்களும் முடிவு பெறுவதைப் பார்க்கிறோம். பெண்கள் மகாநாடு, லிபரல் கார்பரேஷன், தென்னிந்திய 'லிபரல் பெடரேஷன்', ராஜபாளையம் மகாநாடு இவைகளெல்லாம் நடந்து முடிவு பெற்றன. ஒவ்வொன்றிலும் ஏராளமான தீர்மானங்கள் செய்யப்பட்டு பொது ஜனங்களுக்குத் தெரியப்படுத்தியாகி விட்டது. எல்லா மகாநாடுகளும் 'மத்திய அரசியலை'க் கண்டித்து விட்டார்கள்.

வரப்போகும் வருஷத்தில் 'மத்திய அரசியல்' சம்பந்தமாக போராட்டம் வலுக்குமென்று தோன்றுகிறது. புது வருஷத்தின் முதல் தேதி சென்னையில் ஸ்ரீ. எஸ். ஸ்ரீனிவாஸய்யங்கார் மத்திய அரசியல் திட்ட எதிர்ப்புத் தினத்திற்குத் தலைமை வகித்தார். இவர் அரசியலுக்குத் திரும்பி வந்திருப்பதால் இப்போராட்டம் சரியான பாதையில் சென்று வெற்றி கொடுக்கும் என்று பொது ஜனங்கள் காங்கிரஸ்காரர்கள் உட்பட எதிர்க்கிறார்கள்.

சென்ற வருஷத்தில் ஜனனமான நொண்டிக் குழந்தையான ஹிந்தி எதிர்ப்பு இயக்கம் வருஷக் கடையில் ஒரு மகாநாடு ஸ்வரூபமாக ஜலந்துகிரவுண்டில் தோன்றிற்று. ஸர் பன்னீர் செல்வம்போன்ற தேசபக்தர்கள் ஒன்று கூடி இரண்டு மூன்று நாட்கள் தியாகங்கள் பல வற்றை அங்கே புரிந்து 'வகுப்புவாத அரக்கனைத்' தொழுதுவிட்டுச் சென்றார்கள்.

ஆனால் ராஜபாளையம் மகாநாடு அந்த ராக்ஷஸனைக் கொன்று குழியை வெட்டி மூடி விட்டது.

புது வருஷத்தில் இந்த அரக்கன் மறுபடியும் எழும்பாமல் இருக்க ஸ்ரீனிவாஸய்யங்கார் தலைமை உதவி செய்யும் என்பது நிச்சயம்.


வருஷப்பிறப்பின்போது ராஜதானி எங்கும் விவசாயிகளுக்குக் கஷ்டம் உண்டாகியிருப்பதைக் கேட்கிறோம். பல ஜில்லாக்களில் மழையின்மையாலும், புயலாலும் இவ்வருஷம் விவசாயம்கெட்டு வறுமை உண்டாகியிருக்கிறது. ராஜாஜி கூறியபடி இதனால் சர்க்கார் வரவு செலவைச் சரிக்கட்டுவதுகூட கஷ்டமாகலாம்.

# சென்னை சங்கீத வித்வத் சபை

12-வது 'மேளம்'

## அகாடமி

1927-ல் சென்னையில் நடந்த அகில இந்திய காங்கிரசிலிருந்து பிறந்த சென்னை சங்கீத வித்வத் சபைக்கு இன்று 12 வயது ஆகிறது. இன்னும் சிறுமியாகவே தானிருக்கிறாள். அவள் இன்னும் சில




வருஷங்களில் அடையப்போகும் யௌவனத்தின் 'ஆரோஹ அவரோஹ லக்ஷணங்கள்' இப்பொழுதே தென்பட ஆரம்பித்து விட்டன.

நம் நாட்டின் கலைகளில், கவிதை, சில்பம், ஓவியப் முதலியன அழிந்துபோயும், குத்துயிருமாயும், சில 'கோனவஷ்டையாய்' மாறிப்போயும் காணப்படுகின்றன. கலைகளில் ஊக்கமே இல்லை; கவலைகள் வேறு விஷயங்களில் அதிகரித்து விட்டன. ஆனால் ஏதோ காரணத்தால் நமது கர்னாடக சங்கீதத்தை மட்டும் நாம் இழக்கவில்லை. இது ஒரு ஆச்சரியமாகத்தானிருக்கிறது. ஆனாலும் இதில்கூட இப்பொழுது விதேசியம் அதிகப்பட்டு வருகிறது. பொது ஜனங்களின் தலை ஹிந்துஸ்தானி யென்றால் சுற்றுகிறது. சில வித்வான்களுக்கு ஐரோப்பியமுறைகளில் அபிமானம் விழுந்திருக்கிறது. வங்காள சங்கீதமே ஐரோப்பிய சங்கீதக் கலப்பில் ஈடுபட்டுவிட்டது.

தென்னாட்டிலும் ஐரோப்பிய பத்ததியால் மோகங்கொண்ட ஸாம்பமூர்த்தி, பாண்டியன், வெங்கடகிரியப்பா என்ற மூவரும் கர்னாடகத்தையும் ஐரோப்பியத்தையும் சேர்த்து வைக்கப் பார்க்கிறார்கள். ஆனால் இம்மூவரின் கூட்டிசைக்கும் ஆர்சஸ்ட்ராவுக்கும் காததூரம் இருக்கிறது.

மொத்தத்தில் தற்போது சங்கீதத்தில் மட்டும் அதிகமான ஊக்கமேற்பட்டிருக்கிறதென்று நன்றாய்த் தெரிகிறது. அது வீக்கமா, விருத்தியா என்று மட்டும் பலர் ஸந்தேகிக்க இடம் இருக்கிறது. கர்னாடக சங்கீதமென்ற அபலையை ஒரு பக்கம் இசைப்படமும், ஒரு பக்கம் ரேடியோவும் ஒரு பக்சம் கிராமபோனும் இழுக்க, அவளுடைய நிலை பரிதாபகரமாகவே இருக்கிறது. இப்படி நம்மிசை படர்ந்துபோன ஒரு நிலையில், அந்தக் கலையின் கலைத்தன்மையையும், அதன் சாஸ்திரத்தையும்,



ஸம்பிரதாயங்களையும் மிகவும் ஜாக்கிரதையாய்ப் பாதுகாத்து வரவேண்டிய அவசியம் இருக்கிறது. அந்த அவசியத்திற்கே சென்னை ஸங்கீத வித்வத்ஸபை இருந்து வருகிறது.

சென்னை ஸங்கீத வித்வத் ஸபையின் நோக்கங்கள் எல்லாம் பெரியவை. அவை

யனைத்தையும் பனிரண்டு வருஷங்களில் ஸாதித்துக்காட்ட முடியாது. இந்த வித்வத் ஸபை ஸங்கீத உபாத்தியாயர்களுக்கு ஒரு பள்ளிக்கூடம் நடத்தி வருகிறது. அதை இப்பொழுது துரைத்தனத்தார் அங்கீகரித் திருக்கின்றனர். இந்தப் பள்ளிக்கூடம் மேலும் வளர்ந்து, ஒரு பெரிய அனுபவஸ்தரான வித்வானின் தலைமையின்கீழ் அநேகம் மாணவர்கள் படிக்கும்படியானுல் எவ்வளவோ நன்ருயிருக்கும். பல மாணவர்களைப் பல தூர இடங்களிலிருந்துகூட இழுக்கும் தன்மை இப் பள்ளிக்கூடத்திற்கு வரவேண்டுமானுல், ஆகர்ஷ சக்தி வாய்ந்த பெரும் வித்வான்களில் ஒருவர் அதன் தலைவராய் ஏற்பட வேண்டும்.

இரண்டாவதாக ஆராய்ச்சியின்றி ஒரு சீர்திருத்தமும் அபிவிருத்தியும் உண்டாகாதலால், அகாடமியில் ஒரு ஸங்கீதப் பத்திரிகை நடத்தி வருகிருர்கள். இதற்கும் பொதுஜன ஆதரவு அதிகரித்தால் அகாடமி எவ்வளவோ வேலைகளை செய்து முடிக்கலாம். வருஷந்தோரும் பலதரமான பாட்டுகளில் போட்டிகள் வைத்துப் பரிசு அளிக்கிருர்கள். இப்போட்டி விஷயத்தில் ஒன்று சொல்ல வேண்டியிருக்கிறது. ஸ்திரீகளுக்கென்று பிரத்தியேக சொத்தாயிருக்கும் லாலி, ஊஞ்சல், ஓடம், கும்மி, கோலாட்டம் முதலியனாடோடி ஸங்கீதத்தில் சிறுமிகளுக்குப்போட்டி வைக்கவேண்டும். ஸ்திரீகளிடம் இந்த வகை இப்பொழுது அழிந்து போய்க்கொண்டு வருகிறது.

## சர்ச்சை

இதைத்தவிர, அகாடமியார் பிரதி வருஷம் ஸங்கீத வித்வான்களில் ஒருவரைத் தேர்ந்தெடுத்து, அவரை அக்கிராசனுதிபதியாய் வைத்து, ராகங்களின் லக்ஷணங்களைச் சர்ச்சை செய்து, தாம் கண்ட தீர்மானங்களை பத்திரிகை மூலமாயும் தம் 'ஜர்னல்' மூலமாயும் வெளியிடுகிருர்கள். ஆனுல் இந்த சர்ச்சை அனேகமாய்ச் சச்சரவாகவே ஆய்விடுகிறது. வித்வான்கள் சர்ச்சைக்கு எடுத்துக் கொண்டிருக்கும் விஷயத்தைப்பற்றி கொஞ்சமாயும் கதையை அதிகமாகவும் பேசுகிருர்கள்; ஹாஸ்யமாயும், ஒருவரை யொருவர் தாக்கவேண்டுமென்றும், கக்ஷிகள் கூட்டிக்கொண்டும், சில சமயம் வாய் தடித்துப் போய் நேருக்கு நேர் தூற்றிக் கொண்டும் வருகிருர்கள். இதனுல் வரும் மனஸ்தாபத்தால் பாதியில் கொட்டகையை விட்டு எழுந்தும் போய் விடுகிருர்கள்; "எனக்கு ஸாயங்காலம் கச்சேரி போட்டிருக்கா என்ன? நான் எதற்கு சர்ச்சைக்கு வர வேண்டும்?" என்கிருர்கள் சிலர். வித்வான்கள் நாட்டை ராகத்தைப்பற்றி 3 நாள் பேசி யிருக்கிருர்கள்! ஆனுல் 3 நாளில் எவ்வளவு வீண் பேச்சு, சண்டை!

சர்ச்சையில் சில வித்வான்கள் பழம் புஸ்தகங்களையும் ஆதார நூல்களையும் தாழ்மைப்படுத்தி, அவைகள் ஏட்டுச் சுரக்காய், ம்யூஸியம் ஸாமான்கள் என்று சொன்னுர்கள்; ஒரு வரம்பு வேண்டுமென்று தோன்ருவிட்டால், சீர்திருத்தமே வேண்டாம், சர்ச்சையே வேண்டாம், கான்பரன்ஸே வேண்டாம். ஸம்ஸ்க்ருதத்தில் உள்ள நூல்களை எவ்வுதவியாலே வித்வான்கள் படித்து ஆராய்ந்தவர்களாயிருந்தால் எவ்வளோ மேன்மைப் பட்டு விடும் நம் ஸங்கீதம். இது காரணமாகவே தான் அகாடமியார் பழம் நூல்களை அச்சுக்குக் கொண்டுவந்து மொழி பெயர்ப்புடன் பதிப்பிக்கப் பாடுபட்டுக் கொண்டிருக்கிருர்கள்.

சர்ச்சையில் மற்ருெரு விஷயம். இவ் வருஷம் ஆனந்த பைரவிக்குப் பாடப்பட்டதுபோல் எவ்வளவு லக்ஷ்யம் தெரியுமோ வித்வான்களுக்கு, அவ்வளவும் பாடப்பட வேண்டும். முக்கியமாய் ஒரு ராகத்தின் சர்ச்சையில் அதிலுள்ள கீர்த்தனங்கள் (முக்கியமாய் தியாகய்யர், தீக்ஷிதர், சியாமா சாஸ்திரிகள்), லக்ஷணகீதம், வர்ணம், க்ஷேத்திரியர் பதம், புரந்தரர் பாட்டு, நாடகப் பதங்கள்—இவ்வளவும் பாடி லக்ஷண நூல்களுடன் ஒப்பிட்டு, ஒரு தீர்மானத்திற்கு வரவேண்டும். ஒரு ராகத்தில் க்ஷேத்திரிய பதம் பாடவென்று ஒருவரை ஏற்படுத்தி வைத்துக்கொள்ள வேண்டும். லக்ஷண கிரந்தத்தின் அபிப்பிராயத்திற்கு ஒரு ஸம்ஸ்க்ருதம் தெரிந்த வித்வான்; புரந்தரரைப்பாட ஒரு தாஸர் கூட்டத்தார்; இப்படி திட்டமாய் ஏற்பாடு செய்து கொண்டு பாடச் சொல்லி, ஒருவர் பாடும்போதோ, பேசும் போதோ, மற்ருெருவர் கரடியாய் விழுந்து பிடுங்

காமலும் நடந்தால் மேன்மையா யிருக்கும்.

இப்பொழுது எட்டு நாள் சர்ச்சைக்கு நடக்கும் வேலைமிகக் கொஞ்சம். அகாடமியிடம் 'படி' வாங்கிக்கொண்டு பல இடங்களிலிருந்து வித்வான்கள் வருகிறார்கள். ஒரு நாளுக்கு 3 மணி நேரங்கூட ஒழுங்காய் சர்ச்சை நடப்பதில்லை. வேலை இன்னும்செய்யலாம். மேலும் ஒரு வருஷத்திற்கென்றுதேர்ந்தெடுக்கப்பட்ட வித்வானின் தலைமையின்கீழ் மறு கான்பரன்ஸுக்குள் ஒருதரம் கூடி சர்ச்சைக்கு எடுத்துக் கொண்ட விஷயங்களை முடிக்கலாம். ஒரு போதுமே சர்ச்சைக்கு எடுத்துக் கொள்ளப் படாதபடி சில விஷயங்கள் ஒவ்வொரு வருஷமும் சர்சை விஷய அட்டவணையில் காணப்பட வேண்டாம். இந்த அட்டவணையை சிறிதாய், தற்போது ராக ஆராய்ச்சியுடனும், போதனா முறைகளுடனும் சுருக்கிக் கொள்ளலாம்.

இவ்வளவு விஷயமும் வித்வான்கள் அனைவரும் அகாடமி உபசாரத்திற்குக் காத்துக் கொண்டிருக்காமல் தாமாய் முன்வந்து ஒத்துழைத்து நடத்தினால் நடைபெறும். என்ன காரணத்தாலோ பல பிரபல வித்வான்கள் சர்ச்சைக்கு வருவதே இல்லை; அகாடமிக் கூட்டத்திற்கே வருவதில்லை. 12 வருஷங்கள் ஆகியும் அகாடமி ஒரு பூர்ணமான வித்வத் சபை ஆகாதது வருந்தத் தக்கது. இதற்கு முக்கியமாய் வேண்டியது என்ன வென்றால், அகாடமிக்கு பிரதி வருஷம் ஏற்படும் இரு காரியதரிசிகளில் ஒருவர் ஒரு பாடும் வித்வானாய் இருக்க வேண்டும். வரும் வருஷம் அகாடமியார் இந்த யோசனையை மேற்கொண்டு செம்மங்குடி ஸ்ரீநிவாஸய்யரைப்போல் ஒருவரை ஒரு காரிய தரிசியாகப் போட்டுக் கொண்டு வேலை செய்து பார்த்தால் அதன் பலன் தெரியும்.

சர்ச்சை நடக்கும்போது தலைவருக்கு உதவிசெய்து சர்ச்சையின் குறிப்புகளை எழுத ஞானஸ்தராய் ஒருவர் இருக்கிறார். அவர் அடிக்கடி தானே தலைவராய் ஆய்விடுவது வழக்கம். சிலபேரையே பேசவிடுவதும், சிலரை 'அமுக்கி' விடுவதும் அழகல்ல. தலைவரே தலைமையைப் பூராவும் வகித்தல் நலம்.

சர்ச்சைக்கு வரும் வித்வான்கள் முன்னதாய் யோசித்து, ஆராய்ச்சி செய்து கொண்டு, அருமையாயுள்ள லக்ஷியங்களை தேடியெடுத்துக் கொண்டு, தயாராய் வர வேண்டும். இவ்வருஷம் சர்ச்சை செய்யப்பட்ட ராகங்கள் பழக்கத்தில் அதிகமாயுள்ளவை.

## கச்சேரிகள்

சங்கீதம் தலைசாயாம லிருப்பதற்காக உழைத்து வரும் அகாடமியின் கச்சேரிகளில் எல்லா வாத்தியங்களுக்கும் இடம் வேண்டும். ஒரே வாய்ப்பாட்டுக் கச்சேரிக்கு 3 தாள வாத்யம் வைக்க வேண்டுமென்று சொல்லவில்லை. பக்கமேளம் குறைந்துதானிருக்கவேண்டும். ஆனாலும், நம் சங்கீதம் காலக்கிரமத்தில் வாய்ப்பாட்டு, பிடில், மிருதங்கம் இம்மூன் றுடன் ஒழுங்கிவிடும் என்ற பயத்திற்கு அறிகுறிகள் இப்பொழுதே தென்படுகின்றன. இவ்வருஷம் புல்லாங்குழல் கச்சேரியே இல்லை. ஹிந்துஸ்தானிக் கச்சேரியே இல்லை. மிருதங்கத்தில் தற்சமயம் மிக அழகாய் வாசிப்பவரான மணி அய்யர் இல்லாதது அகாடமியின் கச்சேரிகளுக்கு மிகக் குறையே. மற்றும், டோலக், கடம், மோர்சிங், கெத்து வாத்தியம் (இது மிகவும் இனிமையான தாளவாத்தியம். ஆவுடையார் கோவில் ஹரிஹர பாகவதர் ஒருவர்தான் இதை இப்பொழுது வாசிக்கிறார்.) முதலிய வற்றிற்கு ஏதாவது ஒரு வகையில் இடம் கொடுத்து, இவையும் இருக்கின்றன என்று காண்பிக்க வேண்டும். எல்லா கச்சேரிகளையும் ஒரே ஆசில் அமைக்க வேண்டியதில்லை. கீர்த்தனங்களை விசேஷமாய் பாடம் பண்ணினவர்கள் கீர்த்தனங்கள் பல பாடலாம்; பதங்களையே தங்கள் சம்பிரதாயத்தில் அதிகமாய் வைத்துக் கொண்டிருப்பவரிடமிருந்து அவர்களுடைய 'ஸ்பெஷல்' பாட்டுகளைக் கேட்கலாம். இப்படியாய் 'ப்ரொக்ராமில்' புதுமை (Variety) இருக்க வேண்டும். அகாடமியின் வேலைக்குப் பணம் அவசியம்; ஆனாலும், பணம் வரும் கச்சேரிகளை மட்டுமே போடுவது கூடாது. எல்லாவற்றையும் எல்லோரும் ரஸிக்க முடியாது. ஒரு கலைக்கு எவ்வளவோ ஸ்பரூபங்கள் உண்டு. சிலவற்றை

இரண்டொருவரே அனுபவிக்க முடியும். எதற்கும் இடம்மட்டும் வேண்டும்.

இந்த வருஷம் "டைகர்", செம்மங்குடி ஸ்ரீனிவாசய்யர், ஸ்ரீ பாலசுப்பிரமணியம், ஸ்ரீ ராமானுஜ அய்யங்கார்—இந்த நால்வருடைய கச்சேரிகளும் தரமாயிருந்தன. முசிரி சுப்ரமணிய அய்யர் கச்சேரி தோல்வி. செம்மங்குடி நாராயண ஸ்வாமி அய்யர், ஸ்ரீ வெங்கடசாமி நாயுடு, ஸ்ரீ ராஜமாணிக்கம் பிள்ளை மூவருமே நன்ருக வாசித்தார்கள்.

ஸ்ரீ சுப்பலக்ஷ்மி கச்சேரியைப்பற்றி ஹிந்து பத்திரிகையில் விமர்சகர் சொன்னது சரி. ஸ்திரீகளிடமிருந்து வரும் ஸங்கீதத்தில் தனியான குணம் ஒன்றிருக்க வேண்டும்; ஆண் கச்சேரியின் 'காபி' யாக இருக்கக்கூடாது பெண்கள் கச்சேரி. பெண்களிடமிருந்து பல்லவியும் விஸ்தாரமான ராகாலாபனைகளும் வேண்டாம்; பதங்களும், ஜாவளிகளும் அழிந்துபோய்க்கொண்டிருக்கின்றன. அவற்றைப் பெண் கச்சேரியின் முக்கியத் திட்டமாய் செய்தால் நலம். ஸ்ரீமதி சுப்பலக்ஷ்மியின் கானம் மிகவும் இனிமையாக இருந்தது.

பரத நாட்டியம்

இரண்டு நாட்டியக் கச்சேரிகள் நடந்தன. நாட்டியம் செய்த இருவரையும் தயாரித்தவர் ஒருவர்தான். இவர் சம்பிரதாயமாயிருக்கும்'அலாரிப்பு' என்றசொற்கட்டுக்கு பதிலாக வார்த்தைகளாலான ஸாஹித்ய மொன்றை ஏற்படுத்தி யிருக்க வேண்டாம்.

ஸ்ரீ பாலசந்திராவின் சரீரம் நாட்டியத்திற்கு அமைந்ததுதான்; முகம் மட்டும் பாவாபிநயத்திற்குக் கொஞ்சமேனும் தகுந்ததல்ல.

ஸ்ரீ பாலஸரஸ்வதி மிகப் பெரியவரென்று பெயர் எடுத்து விட்டார்; அவரைப் போற்றுபவர் மிகவும் வலுத்திருக்கும்போது, அவரைப்பற்றி ஒன்றும் எழுதாமலிருப்பதுதான் உசிதம். ஆனாலும் ஓரிரண்டு குறைகளைக் குறிக்கலாம்.

வெறித்தாற்போல் அடிக்கடி நிற்பது; நடுநடுவே சபைகளில் ஏதாவது சத்தம் எழுந்தால் கடுமையாய் விழித்துஅதைக் கண்டிப்பது, இவை ரஸத்தை சிதைக்கின்றன. ஒரு 'ஒன்றரைக் கண் பாவம்' கூட அடிக்கடி விரஸப்படுத்துகிறது.

நடிகை யாடாத சொல் கட்டுகளை விட்டு விடலாம்: நட்டுவனூர் சொல்லும் திறமையைமட்டும் காட்டி, அதற்கு நடிகையின் நடனமில்லாமல் பல இடங்கள் வந்தன. பாடத்தை மட்டும் நட்டுவனூர் ஒப்பித்து விட்டு ஆடுபவர் சும்மாய் நிற்பது எதற்காக?

கமாஸ் வர்ணத்தில் எத்துக்கடை ஸ்வரங்களும் அதன் ஸாகித்தியங்களும் அற்புதமானவை. 'உல்லாஸமு' என்ற இடமும் 'ஸஸா நிநி' என்ற இடமும் மிகவும் அழகு வாய்ந்தவை. வர்ணம் என்ற கொடி எத்துக் கடையில் பூக்கிறது. இதை முன்பு நாட்டியத்தில் உற்சாகம் கொண்ட ஒருவர் நறுக்கிவிட வேண்டுமென்ருர்; அவருடைய ரஸிகத்தன்மை என்னவென்று சொல்லுவது?

ஆட்டத்துடன் ஒப்பிட்டால் இந்த நடிகை செய்த அபிநயம் சப்பை என்றே சொல்ல வேண்டும். ஒரு சமயம் இந்த நடிகை ஆட்டத்தையே விட்டுவிட்டு, கையை மட்டும் காட்டிக்கொண்டிருந்தது போய், இப்பொழுது பூர்ணமாய் ஆடுகிறது நல்ல விஷயம்.

## ஆசிரியர் அறிக்கை

முக்கியமாக கிராமப் புனருத்தாரணத்தைப் பற்றியும், பொதுவாக ஸ்தல ஸ்தாபன, ரோட்டு, ரயில் சௌகரியா சௌகரியங்களைப் பற்றியும், நேயர்கள் தங்களுக்குத் தோன்றும் ஆலோசனைகளை நமக்குச் சுருக்கமாக எழுதி அனுப்புமாறு கோருகிறோம். அந்த யோசனை நமது சமூக வாழ்வின் எந்த அம்சத்தைக் குறித்தாகிலும் இருக்கலாம்; தனி நபரைக் குறித்துமட்டும் இருக்கக் கூடாது.

ஆசிரியர்

# திண்ணையில்

(தொடர்ச்சி)

(ராவ் சாகேப் கே. சுப்ரமணியம்)

“ரொம்ப நன்னு சொன்னிய. அப்பறம் டாக்டர் ஸங்கதி?”

“ராம, ராம. என்னை என் சும்மா தொந்திரவு படுத்தறே. நான் சொல்றதை யாராவது கேழ்ப்பாளா? அப்படி நடக்கப் போறதா?”

“ஏன் நடக்காது? பத்துப் பேருக்கு தெரிஞ்சா நியாயமானதுன்னு நடக்கிறது. வைத்தியர் வேண்டுமா? நல்லதா? சொல்லுங்களேன்.”

“வைத்தியன் வந்தால் நல்லதுதான். ஆனால் அவாளுக்கெல்லாம் என்னமோ சர்க்காரிலே சம்பளமில்லாமல் வேலைபார்க்கணும், சாமர்த்திய மிருந்தால் ஊர்கள்லே சம்பாதிச்சுக் கட்டும் என்று சொல்றுளாமே? அப்படின்னு ஊரெல்லாம் வியாதியாய்த்தான் போயிடும்; நினைச்சத்துக்கெல்லாம் டாக்டர் தான். புது நாகரீகம்டா, புது நாகரீகம். இத்தோடு அவனுக்கும் சம்பளமில்லேன்னு ஊரையே சுரண்டத்தானே பார்ப்பான். இத்தனை நாள் டாக்டர்கள் தொகை குறைந்திருந்ததே. ஜனங்கள் விருத்தி ஜாஸ்தி தானே ஆச்சு? வைத்தியர்கள் ஜாஸ்தி ஆனுல் வியாதிகளும் ஜாஸ்தி. புதிசு புதிசாவும் கிளம்பும். டாக்டர்கள் தேவை நமக்கு ஜாஸ்தியா அவசியமிருக்காது.பட்டணங்களிலே ஜன நெருக்கடி ஜாஸ்தி. நாத்தமும் அதிகம். பணம் கூடவே அதிக நடமாட்டம். காபி ஹோட்டல்கள். சினிமா. சினிமா நெருக்கடி. நல்லகாத்து கிடையாது. நல்ல திரேக உழைப்புமில்லே. அஜீரணம் ஜாஸ்தி. அதனுலே அநேக வியாதிகள். நமக்கு என்னடா நல்ல காத்து. நல்ல ஜலம். ஊரெல்லாம் நம்மதுதான் திரிகிறதற்கு. வயல் வெளி வேலை உழைப்பும் இருக்கு. சுத்தமான காய்கரி நம்பகொல்லையிலே போட்டுச் சாப்புடுகிறோம். நமக்கு இவ்வளவு கஷ்டப்பட்டும் முழுச் சாப்பாடு கிடையாதபோது அஜீர்ணமும் அதினுலே வியாதியும் எங்கிருந்துவரும்? அப்படி ஏதாவது வியாதி வந்தால் இப்போ இருக்கிறுப்பிலே ஆஸ்பத்திரிக்கோ டாக்டரையோ போய் பார்க்கிறோம். அவாளும் செய்ய வேண்டியதைச் செய்யறு. லங்கணம்தான் பரம ஔஷதமாச்சே. அதினுலேயே ஸர்வ வியாதி நிவாரணம் என்று சொல்றுளே. இப்பதான் பாதி லங்கணம். பூரா லங்கணமா யிருக்கே. வியாதி நமக்கு ஏண்டாவறது? வறதுன்னு, குறைச்சல்தானே. பலவீனமானு வியாதியும் வரும். அந்த பலவீனத்தைப் போக்க வழியில்லே அசலிலே. டாக்டர் வேணும்னு போடறேன் என்கிறுன். காரணத்தை நிவர்த்தி பண்ணினு இந்த டாக்டர்கள் அதிகம் தேவையில்லையே! வெள்ளம் வருகிற:முன்னமேனு அணை போட்டுக்கணும்? வந்த பிறகு கஷ்டம் தானே? நஷ்டமும் கூட. சாப்பாடும் ஜாஸ்தி தான். ஊர்க்காரா எல்லாம் சரியா நன்றுய்ச் சாப்பிட்டு பலமாய் இருக்கிறதற்கு வழியைக்காணும்? இப்போ மருந்து என்னவந்தது? டாக்டர் என்ன பண்ணுவான், சீமை மருந்துக்களுக்கு யோகம்தான். நிறைய சிலவு ஆகும். அவாளுக்கும் நம்பகிட்டப் பிடுங்கிறதும் மருந்திலே கமிஷனும் லாபம்தான்.

“என்ன தாத்தா! நீங்கள் சொல்றதைப் பார்த்தால், பழைய காலத்து ராஜாக்கள் மாதிரி, கிருமங்களிலேகூட, சோம்பேரி மடம், நல்ல சத்திரம், அதிலே நல்ல தண்டச் சாப்பாடு மூணு வேளையும் போடணும். உங்களெல்லாரையும் நன்னு கொழுக்க வைக்கணும் கிறுப் போலருக்கே? மெள்ள மெள்ளக்கொண்டு வரியளே கதையை.”

“அடே அசடே. அப்படியில்லேடா அர்த்தம். ஏதோ ஒரு கிராம சேவைக்கு குடுக்கிறுன் என்னியே, அதை முதலாய் வைத்துக் கொண்டு, ஊர்க்காரனையும் இன்னெரு பாகம் போடச் சொல்லிச் சேர்த்துக்கொண்டு, ஊருக்கு வேண்டிய காரியங்களை யெல்லாம் செய்யலாம். நால்

நூற்கச் சொல்லலாம். அந்த நூலை துணி செய்யலாம். ஸர்க்கார் தங்களுக்கு வேண்டியதை இங்கே வாங்கிக் கொள்ளலாம். ஊர்காராளும் உபயோகப்படுத்துவா. ஊரிலே இருக்கிற தச்சன், கொல்லன், தட்டான் முதலியவர்களுக்குத் தொழில்கள் ஏற்படுத்தி அவர்கள் செய்ததை எடுத்துக் கொள்ளலாம். வேறு தொழில்களும் செய்யலாம். அடே, கடியாரங்கள் எவ்வளவுடா நம்ம தேசத்திற்குவரது? பித்தளை கில்ட் நகைகள் எவ்வளவுடா, சின்னச் சின்ன யந்திரங்கள் எவ்வளவுடா? இதெல்லாம் இந்த கிராமத் தொழிலாளிகளைச் சேர்த்து செய்யச் சொல்லப்படாதா? மண்வெட்டி, கோடாலி, அருவாள், கத்தி, உளி, ஆணி, தாப்பாள், கீல்கள், திருகுஆணிகள், தையல் மெஷின்கள், ரம்பங்கள், வாள்கள் இதெல்லாம் செய்யலாமே. இதெல்லாம் ஒரு உத்தியோகஸ்தனைப் போட்டுக் கண்டிப்பாக வேலை வாங்கிக்கொண்டு சாமான்கள் தயார் செய்து வித்தால் கூலிக்குக் கூலி. லாபத்துக்கு லாபம். தொழில் முறை விருத்தி; சாப்பாடு நிறைய, முதலும் கெடாது. சோம்பேறித்தனம் குறைவு. வம்புச் சண்டை குறைச்சல். நம்ம தேசத்துப் பணம் அன்னிய தேசங்களுக்கு ஓடாது. இன்னும் எவ்வளவோ நல்லது. பணமும் சாப்பாடு மிருந்தால் ஊர்க்காரர்களெல்லாம் ஊரைச் சுத்தமாய் வைத்துக் கொள்ள மாட்டாளா? அல்லது அந்த அதிகாரிகள் சொல்றபடி செய்ய மாட்டாளா? வாரத்துக்கு ஒரு நாள் பொது வேலை என்றால் நடக்காதா? இப்பக்கூட ஊரெல்லாம் சுத்தமா வச்சுக்கணும்னு ஒருவர் வந்து லெக்சர் பண்ணணுமா? ஒன்று பார்த்திருக்கிறீயாடா நீ? மார்கழி மாசத்திலே காலமே நாம் பஜனை பண்ணிக் கொண்டு போறமே அப்போ ஊரெல்லாம் எப்படிடா இருக்கு. வாசலை பெருக்கி மெழுகி கோலம்போட்டு அழகாக வைச்சுக் கொண்டிருக்கலியா? அந்த மாதிரி ஏண்டா தினம் தினம் பண்ணப்படாது. வீதிவீதியா பஜனை! அப்போ பார் ஊர் பொம்மனாட்டிகள் எல்லாம் எப்படி ஊரைப் பண்றானு பாரு. இதற்கு சர்க்கார் பணம் கொடுத்து ஒருத்தரை ஊர் ஊராயனுப்பணுமா? வீண் செலவு தானேடா? என்னத்துக்கடா அவன் வந்து சொல்லணும்? நாமே ஏண்டா செய்யப்படாது? ஆனால் ஒரு ஸமாசாரம். சர்க்கார்லே ஒரு தப்பு பண்றாள். என்ன தெரியுமா? பெரிய பெரியப் பட்டணங்களிலே யிருக்கிற சாக்கடை கழிவடை ஜலத்தை எல்லாம் அநேகமா நல்ல நல்ல ஆறுகளிலே விட்டுவிட்டு அசுத்தம்பண்றா. நம்மை 'நீ சுத்தமாயிரு. கிணறு வெட்டக் காசு கொடு. கக்கூஸ்களுக்கு பணம் தேவை. டாக்டர் ஆஸ்பத்திரி எல்லாம் வருகிறது ஊருக்கு' என்கிறார்கள். என்னடா? சொல்றது ஒண்ணு, செய்யறது ஒண்ணுயிருக்கு."

"ஆமா தாத்தா. அப்படித்தானிருக்கு. ஆனால் அந்த சாக்கடைத் தண்ணீர் அசுத்தங்க ளெல்லாம் எப்படிப் போகிறது, என்ன செய்யணும் என்கறேள்".

"ஏண்டா, அதுக்கென்னடா. வழியா யில்லை? அந்தச் சாக்கடைத் தண்ணியை யெல்லாம், குழாய்மூலம் பட்டணங்களுக்குப் பக்கத்திலிருக்கும் நிலங்களில்பாய்ச்சி, மாடுகளுக்குப் பில்லுத்தோட்டம், வயல்களுக்கு நீர்பாசனம், தோட்டங்களுக்குத் தண்ணீர் விட்டு பணம் வாங்கிக்கிட்டுமே. இரண்டு பேருக்கும் லாபம் தானே. இங்கே நல்ல சத்துக்களடங்கிய ஜலத்தை வீணு ஆத்திலே விட்டுவிடறது. ஊரிலிருக்கிறவாகிட்ட வரிபோறல்லை, போறல்லை என்று வீட்டுவரி, வாசல்வரி, தண்ணி வரி, க்ஷவர வரி வண்ணான் வரி, நாய் வரி, மாட்டு வரி, கழுதை வரி இன்னு எல்லாம் வரிமயமாப் போச்சு."

"சரியாப் போச்சு தாத்தா! ஓங்ககிட்ட ஒன்றும் நடக்காது போலேருக்கு. சரியாத்தான் சொல்றியள். நியாயமாத்தான் தோணறது. சர்க்காரிலே என்ன பண்ணுவாளோ, பார்க்கணும்."

"பார்க்கிறதாவது. நடக்க வேண்டியது தான். சர்க்காரும் உதவிசெய்ய வேண்டும் எல்லாம் சர்க்காரே ஒக்காத்திவைச்சு சாப்பிடச் சொல்லமாட்டா. ஆனால் நமக்கெல்லாம் இந்த டாக்டர், மருத்துவச்சி, லெக்சர்கள், கப்பிரோட்டு, கிப்பி ரோடு எல்லாம் வாண்டாண்டா. நம்ம பிழைப்புக்கு நல்ல தொழில் கண்டு பிடிச்சு, விவசாயத்தோடே கைத்தொழிலும் விருத்தி

யானல், எல்லாருர்க்கும் திரேக சௌக்கியம், கிராம க்ஷேமம், தேசமேன்மை, எல்லாம் உண்டாகும். இல்லாமல் கொஞ்சம் காசைக் கொடுத்து இந்த ஊரை சுண்ணும்பு அடிச்சுவிட்டுவா என்கிருப்பிலே தான். என்ன பிரயோஜனம், தற்காலம் சர்க்கார் இதற்கெல்லாம் செலவழிக்கிற பணத்தையும், ஊரிலேயும் சேரும் பணத்தையும் சேர்த்து ஒரு பாங்கி ஏற்படுத்தணும். அந்தப் பணம் கடன்கிடன் கொடுக்கப்படாது. அதை முதலாய் வைத்துக் கொண்டு தொழில் ஆரம்பிக்கணும். அந்த தொழிலில் வேலை செய்யறவாளுக்கு கூலி கொடுக்கணும். அந்தத் தொழில்கள் குடிசைத் தொழிலாயிருக்கணும். அந்த முதலுக்கு அந்த ஊரே ஜவாப்தாரி என்று நிச்சயப்படுத்திவிட வேண்டும். செய்யப்பட்ட சாமான்களேயோ வஸ்துக்களேயோ நல்ல பிரசாரம் செய்து விற்க வேண்டும். சர்க்காரும் எடுத்துக் கொள்ளணும். வருகிற லாபத்திலிருந்து ஊர் பொது வேலைகள் செய்யலாம்.''

"ஊர்க்காரர்களெல்லாம் செய்வாளா?''

"செய்யறவா செய்யட்டுமே, சோம்பேறிகள், பணக்காரர்கள், டம்பக்காரன்கள் நவநாகரீகங்கள் கொஞ்சநாள் முன்னே பின்னே பார்க்கும். எல்லாம் வயிறு காயக் காய வழிக்கு வருகிறதுகள். இப்பதான் பணம் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமா வடிஞ்சு மறைஞ்சு போயிண்டிருக்கே.''

"இப்படிச் செய்தால் நல்லதுதான். ஆனுல் தொழில் நடத்த திறமை வேண்டுமே. சரியா யில்லாமல் போனுல் கேலியான்னு முடியும். நஷ்டமும் ஆயிடுமே! உள்ளதும் போச்சுடா நொள்ளேக்கண்ணு என்று ஆயிட்டுதூன்னு என்ன செய்யறது?''

"அடே ஒரு சின்ன விஷயம். இப்ப நம்மகிட்ட இருக்கிற நெல்லேக் கைக்குத்தலா குத்தி வச்சுக்கிரேம். அந்த பாங்கிக்காரர்கள் வாடிக்கைக்காரர்ளோடே ஏற்பாடு செய்து கொண்டு வியாபாரம் செய்யக்கூடாதாடா? இதிலே என்ன கஷ்டம்? அநேகம் பள்ளிக்கூட ஹாஸ்டல்கள் இருக்கிறது. அவர்களெல்லாம் இப்போ சுகாதார விதிகள்படி தவிடு போகாத அரிசிதான் உபயோகப் படுத்துவா. சாதாரண ஹோட்டல்களில்கூட தவிடு போகாத அரிசிதான் உபயோகப் படுத்தணும்னு சர்க்கார் உத்திரவு போடலாம். ஜெயில்லேகூட அப்படித்தான் பண்ணுவா. ஏன்னு, தவிடு போகாத அரிசி சாப்பிட்டு கைக்குத்து அரிசிதான் நல்லது என்று சொல்ற சர்க்கார், ஹோட்டல்கள், ஹாஸ்டல்கள், ஜெயில்கள், மாதிரி சர்க்கார் இடங்களிலும் சும்மா விட்டு விடுவாளா? கொஞ்சம் தெரிஞ்சவா கூட கைக்குத்து அரிசி அகப்படலியே என்று தவிக்கிருர்கள். நாம் தனித்தனியா விற்கிறதானுல் அநேக கஷ்டங்கள். ஒரு ஊராவது அல்லது 5-6 ஊர்களாவது ஒன்று சேர்ந்து செய்தால் எவ்வளவு நல்லது? இதிலெல்லாம் நமக்கு வரும்படி வருகிற அம்சங்கள் தானே! எந்தவிதமாயாவது யோக்கியமான வழியில் காசு சம்பாதிக்கணும். ஸம்ஸாரத்தின் செலவுக்கு கடனில்லாமல் சரிக்கட்டணும். அதற்கு மேலே வந்தால் தர்மம், கிர்மம் எல்லாம் உண்டாகும். அந்தத் தவிட்டரிசி சாப்பிட்டால் நமக்கும் நல்லது. உடம்புக்குப் பலம் என்றும் எல்லாம் சொல்ருளே. சீமையிலிருந்து வந்தவர்கள்கூட அப்படித்தானே சொல்ருள். இல்லே, ஹார்லிக்ஸ் கிளாக்ஸோ இந்த மாதிரி சீமை சரக்குகள் தான் நல்லது, இன்டியன் விளேவிக்கும் தானியம் பிரயோஜனமில்லே என்று சொல்ருளா? இல்லியே. மொத்தமாய்ச் சொல்றேன் கேளு. ஊரிலே ஒவ்வொருவனும் தன் தன் குடும்பத்துக்கு வேண்டியது எவ்வளவு, வரும்படி எவ்வளவு என்று கணக்குப் போட்டுப் பார்த்தால் அவனவன் இருக்கிற கேவலஸ்திதி தெரியும். அப்போதாவது முழிச்சுக் கொள்வா. அப்படி யோசனே பண்றதில்லியே இப்போது பேர்வழிகள். என்னமோ சிலவுக்குன்னு எங்கேயாவது ஏதாவது பொய் புளுகு சொல்லிக் கடன் வாங்கிப் பிடறது. ஜோராய்க் "கடன் வாங்கியும் பட்டினியா'' என்று கொஞ்சம் ஜோருய் திரிகிறது. அப்படித் தானேடா இருக்கு ஊரு?''

"என்னமோ கொண்டுவந்து போடரியளே-விவரமா சொல்லுங்கோ. குடும்பத்தின் வரவு செலவு சரிக்கட்ட நன்னுக் கேட்கிறேன்.''

"அடே, விசு. உங்களாத்திலே எத்தனை பேர்? நீங்கள் புருஷன், பெண்ஜாதி உன் அம்மா உன் பிள்ளை, கைக் குழந்தை, ஆக 5 பேர்-சின்ன குழந்தையைத் தள்ளிப் பிட்டு 4 பேர்னு வச்சுக்கோ. தினம் குடும்பத்துக்கு என்ன சிலவு-வருஷத்துக்கு எவ்வளவு என்று பாரேன். குறைஞ்ச ரேட்டில் போட்டாக்கூட தினம் ஆளுக்கு 2 அணு வீதம் வருஷத்துக்கு 4 பேருக்கு 182-8-0.

வருஷாந்திரமும் துணி மணி-ஆளுக்கு 5 ரூ. சமபாகம், 20-0-0.

பண்டிகை விருந்தாளி, சடங்குகள், எண்ணெய், அரப்பு, தமாஷ்கள், இந்தமாதிரிகளுக்கு, 20-0-0.

வைத்திய மருந்து, பள்ளிக்கூடச் செலவு(பையனுது) காகிதம் கார்டு, தபால், தர்மம், தண்டாக்களுக்கு, 20-0-0.

இன்னம் எதிர்பாராததுகளுக்கு சிலவு-ஒரு, 10-0-0.

குறைந்த பக்ஷ செலவு வெகு சிக்கனமாக மொத்தமா ரூ. 252-8-0.

சராசரி ரூ. 250 வேணுமோனுடா-ஒப்புக்கொள்றியா ?"

"இதற்கு மேலேயே ஆகுமே. காப்பிக் கொட்டை, சர்க்கரை, வெத்திலைப் பாக்குக்கே ஜாஸ்தியாகுமே!"

"அதெல்லாம் விட்டுவிட வேண்டியது தான். எல்லாம் தானே வருகிறது பாரு-இப்போ-உனக்கு வருஷாந்திர வரும்படி என்ன வருகிறது எல்லாத்தையும் சொல்லு."

"என்ன வரது? 3 ஏகரா நிலத்திலே சுமார் 100 கலம் நெல் வரும். அதுவும் வாய்தாப்பணம், எருப்பணம், உழவு கூலி, காவல், கோவில் மாமூல் எல்லாம் போகணும்.(நன்னு விளைஞ்சால்தான் 110கலம்னு வச்சுக்குங்கோ.) போனல்-70 கலம் மிஞ்சும்."

"அதுக்கு விலை கலம் 1-8-0னு போடு."

"எங்கே? $1\frac{1}{2}$ ரூபாயா? யார் கேட்கிறு?"

"அடே கணக்குப் போட்டுப் பாரேன். இன்னம் மற்ற வரும்படியையும் போடேன் பாப்பம்."

"அப்படின்னு 70 கலத்துக்கும் $1\frac{1}{2}$ ரூ. ஆக.—ரூ. 105-0-0 ஜாஸ்தின்னு 120-0-0."

"இன்னும் என்ன வரும்படி யிருக்கு"

"தென்னந்தோப்புக் குத்தகையிலே வர்ரது ரூ. 20-0-0."

"மொத்தம் ரூ. 140-0-0."

"அவ்வளவு தான். யாராவது வந்தாப் போனல் வாழைக்காய், மாங்காய், இரண்டு பழம் கொண்டு வருவா. அதற்கு ஜாஸ்தியாகவே சாப்பிட்டுவிட்டு போயிடுவா-மாமனுர், மாமியார் வந்தால் அவளுக்கு 10 ரூ. கிடைக்கும்."

"அதையும் போட்டுக்கோ இப்ப ரூ 150 ஆச்சுதா.இப்போ பார்த்தியா வரவு 150. சிலவு 250. வருஷா வருஷம் ரூ 100 துண்டு விழறது. என்ன பண்றே?"

"கடன் வாங்க வேண்டியது தான்."

"திருப்பி முதலும் வட்டியும் எங்கிருந்து கொடுக்கிறது இப்படி வரும்படி குறைச்சலும் செலவு ஜாஸ்தியாயு மிருந்தால் ? கடனை மாற்றிக் கொண்டிருக்கலாம் கொஞ்சம் நாள். அப்புறம் நிலத்தை அடமானம் ஒத்தி, விற்பனை. சரி நிலம் பங்கிடு ஆயிட்டுது. அப்புறம் ஊர்விட்டு போகிறது. பிச்சை வாங்கிறது. அல்லது ஏதாவது தொழில் அகப்பட்டால் பார்க்கிறது. எங்கே பார்த்தாலும்தான் தொழில் இல்லாமல் திண்டாடுகிறுர்களே, நமக்கு முன்னே பாபர் ஆனவர்கள். நமக்கு எங்கே! கடைசியில் பொய், பித்தலாட்டம், தகல்பாசித்தனம், திருட்டு எல்லாம் வந்துடறது. பசிக்கஷ்டம். இதை கவனித்தாயா?"

கடிதம்

# மந்திரிகளுக்கு விண்ணப்பம்

சென்ற இருபது நாளாகக் குருவை நெல் கலம் ரூ. 1—10—0 ஆக விற்பது, மிராசுதார்களின் பொருளாதாரத்தில் இருள் நீங்கினதுபோல் தோன்றலாம். ஆனால் தீபாவளி செலவுக்குத் தங்கள் நெல்லை ரூ. 1-3-6க்கு விற்று விட்டு இப்போது விலை விற்கும்போது ஏங்கி நிற்கிறார்கள். தஞ்சாவூர் மிராசுதார்கள் என்று சொல்லும்போது அநேகம் பேர்களுக்கு ஆடம்பர வாழ்க்கையும், வைர நகைகளும், நினைவு வரலாம். இப்போது நெல் விலை குறைவாலும், நிலத்திற்கு விலை கிராக்கியில்லாததாலும், பழைய பாக்கிக் கடன்களாலும், அவர்கள் ஸ்திதி மிகவும் பரிதாபகரமாகயிருக்கிறது.

மிராசுதார்களின் பண நெருக்கடிக்குத் தகுந்தாற்போல் நெல் விலையைத் தாழ்த்தியாவது உயர்த்தியாவது நடுவிலிருக்கும் வியாபாரிகள் மிகுதியான லாபம் அடைகிறார்கள் என்பதற்கு அத்தாக்ஷி இப்போது விற்கும் விலை. அடுத்த மாதம் முதல் கிஸ்தி கொடுக்க வேண்டும். இதே மாதிரி வியாபாரிகள் விலை வாசிகளைத் தாழ்த்த நல்ல ஸந்தர்ப்பம். அவர்களுக்கும் நல்ல மிச்சம். உழுது பயிரிடும் மிராசுதார்களுக்குத் திண்டாட்டம்தான். இந்த அனியாயத்தைத்தடுக்க ஒரே ஒரு வழியுண்டு. இந்த பசலி கிஸ்தியை வருகிற பன்னிரண்டு மாதத்திற்குள் கொடுக்கலாம் என்று நமது மந்திரிகள் உத்திரவு போட்டால் ஏழை மிராசுதார்களுக்குப் பால் வார்த்தது போலிருக்கும். மேலும் மிராசுதார்கள் தாங்களே நேராகக் கஜானாவில் பணம் கட்டலாம் என்றும் ஏற்படுத்தலாம். இதனால் உயர்ந்த விலை விற்கும்போது நெல்லை விற்று கிஸ்தியையும் கட்டி கொஞ்சம் மிச்சமும் அடைய மிராசுதார்களுக்கு வசதி உண்டு. மதுவிலக்கு வந்து ஸர்க்காருக்கு வரும்படி குறைச்சலாகயிருக்கும்போது கிஸ்தியை குறைக்க முடியாது. ஆனால் மூன்று மாதத்தில் வசூல் செய்யும் கிஸ்தியை பன்னிரண்டு மாதத்திற்குள் எப்படியாவது கட்டலாம் என்கிற உத்திரவு மிராசுதார்களுக்கு மிகவும் அனுகூலமாகயிருக்கும். பன்னிரண்டு மாதத் தவணை எல்லோருக்கும் போட்டு மாகாண ஆட்சியையும் எப்படிநடத்துவது என்று அஞ்சினால், ரூ. 500க்கு குறைந்து கிஸ்திகட்டும் ஏழை மிராசுதார்களுக்காவது இந்த அனுகூலம் வேண்டும். வருமான வரி (Income Tax) கட்டுகிறவர்களிடமும் ரூ. 500-க்கு மேல் கிஸ்தி கட்டுகிறவர்களிட மிருந்தும் மூன்று மாதத்திற்குள் வசூல் செய்து கொள்ளலாம். அவசியமாகத் தோன்றினால் இந்த விதியை செய்யலாம் என்று கூறினேனே ஒழிய பெரிய மிராசுதார்களை ஜாஸ்தி சிரமப்படுத்த வேண்டும் என்பதற்கல்ல.

இன்னும் ஒரு சிக்கன முறையை நம் மந்திரிகளின் நினைவுக்கு ஞாபகப்படுத்துகிறேன். மிராசுதார்கள் தங்கள் கிஸ்தியை நேராக கஜானாவில் செலுத்தலாம் என்று நிரந்தரமாக ஏற்படுத்தினால் பட்டாமணியார்களையும் அவர்களுக்கு கொடுத்திருக்கும் இரண்டு பியூன்களையும் குறைத்துவிடலாம். பஞ்சாயத்து போர்டு பட்டாமணியாரின் பாக்கி வேலைகளைப் பார்க்க முடியும். வருஷத்திற்குள் வரி செலுத்தாதவர்கள்பேரில், இப்போது இருக்கும் ரெவினியூ இன்ஸ்பெக்டர் சட்ட மூலியமாகவும், பஞ்சாயத்து போர்டு, பஞ்சாயத்து கோர்ட்டு மூலியமாகவும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். இம்முறை அனுஷ்டானத்திற்கு வந்தால் ஏராளமான மிச்சம் உண்டு. இந்த முறையை நமது மாகாணம் முழுவதும் அமுலுக்குக் கொண்டுவர மந்திரிகள் யோசிப்பார்களாகில் ஒரு சிறு தாலுக்காவிலாவது ஒரு வருஷத்திற்கு பரீட்சை செய்து பார்க்கட்டும். கட்டாயம் வெற்றிகரமாக முடியும் என்பது எனது பூர்ண நம்பிக்கை. மூன்று மாதத்தில் செலுத்த வேண்டிய கிஸ்தியை பன்னிரண்டு மாதத்தில் வாங்குவதால் ஏழைக் குடிகளின் நிலைமையும் உயரும்.

டி. எஸ். ரமணி,

# அம்மா யோசனை

"குகப்ரியை"

"அதென்னமோ அப்பா! நான் இப்படிச் சொல்லுகிறேனே என்று நினைக்கிறதிலே ஒன்றும் காரியமில்லை. காலாகாலத்திலே யாரையாவது, பார்த்துக் கேட்டு, எதிலேயோ புகுந்துகொண்டால் பிறகு அதிருஷ்டம்போலிருக்கிறது. ஆனர்ஸ் படித்தாயிற்று. பிறகு விழுந்து விழுந்து 'டைப் பிரட்டி' கற்றுக்கொண்டாயிற்று. மேலே என்ன செய்கிறது? ஒரு குமாஸ்தா வேலைக்குக்கூட லாயக்கில்லே. இன்னும் 4 வருஷமும் ஆயிரம் ரூபாயும் உண்டானால் வக்கலோ, டாக்டரோ, எதையோ போர்டைப் போட்டுவிட்டுத் தூங்கலாம். அந்த ஆயிரம் ரூபாய்க்கு இப்பொ எங்கே போகிறது? எப்படியோ பிரட்டிவிடுகிறோம் என்று வைத்துக்கொண்டாலும் பின்னடி உடனே வரவு வரப்போகிறது என்பது என்ன நிச்சயம்? காலமோ கருப்புக்காலம், காசு கிடைக்கிறது குதிரைக் கொம்பாயிருக்கிறது"...என்று அடுக்கிக் கொண்டே போனாள் அம்மா.

அப்பா வாயே திறக்கவில்லை. பொடிடப்பியை எடுத்து ஒருதடவை நிதானமாய் பொடி போட்டுக்கொண்டார். அம்மாவுக்குப் பதில் சொல்லக்கூடிய சந்தர்ப்பங்களிலெல்லாம் கோபத்தைச் சமனம் செய்துகொள்ளுவதற்காக அப்பா பொடி போடுவது வழக்கம்.

எனக்கோ பதில் சொல்லவே தெரியவில்லை. காலேஜில் படிக்கும்பொழுது நான் கட்டியிருந்த மனக்கோட்டைகள் எல்லாம் ஒரு நிமிஷத்தில் பறந்துவிட்டன. ரிஸல்ட் வரவேண்டியதுதான். உடனே நேரே ஐ. ஸி. எஸ். அல்லது எப். ஸி. எஸ். எந்தப் பரீக்ஷைக்காவது போகிறது. அப்பா பணம் கொடுக்கச் சோம்பல் பட்டால் எந்த (மாமனாராவது) மகராஜனாவது நான் கொடுக்கிறேன் என்று வரக்கூடும் என்று எதிர்பார்த்தேன். அந்தக் காலம் மலையேறிவிட்டது. யார்செய்த பாவமோ ஒரு பிராணிகூட 'ஏனடா பாவி?' என்று ஒரு வார்த்தைகூடக் கேட்கவில்லை.

தப்பித் தவறி ஏதாவது வந்தால் வேலையானபிறகுதான் என்று அப்பா அழுத்தம் திருத்தத்தமாய்ச் சொல்லிவிடுவார். சரி எக்கேடும் கெட்டுப்போகட்டும் என்று நானும் வேலை தேட ஆரம்பித்தேன். ஐந்துரூபாய்க்கு ஸ்டாம்பு ஒரு ரீம் பேபர் வாங்கிவிட்டேன் வேலைக்கு மனுப்போட.

நான் குறுக்கும் நெடுக்குமாய் கூடத்தில் நடந்துகொண்டிருந்தேன். அப்பா மறுபடியும் பொடிபோட்டுக்கொண்டார்.

"என்ன? உங்களைத்தானே. உங்களுக்குத்தான் ஊர்முழுவதும் சிநேகிதாளாச்சே. யாரையாவது பார்த்து இந்தப் பிள்ளையைக் கொஞ்சம் எதிலேயாவது இழுத்துவிடச் சொல்லப்படாதோ?"

சற்றுநேரம் நிசப்தம். அப்பா மோட்டைப் பார்த்துக்கொண்டிருந்தார். என்ன பதில் சொல்லப்போகிறாரோ என்று அவர் வாயையே பார்த்தவண்ணம் அம்மாவும் நானும் நின்றுகொண்டிருந்தோம். வாயைத் திறந்தால்தானே. ஆனந்தக் கனவுகள் கண்டுகொண்டிருந்தாரோ என்னமோ?

அம்மாவுக்கு கோபம் அசாத்யமாயிற்று. "என்ன மோட்டைப் பார்க்கிறீர்கள்? மோட்டில் என்ன எழுதியிருக்கிறது? ஒரு நாளைக்கு மூணுடப்பி பொடி போடுங்கள். கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லவேண்டாம்."

"என்ன ஜானகி, ஆனாலும் இவ்வளவு வாயாடியாய்ப் போய்விட்டாய்?" என்று கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தார் சேசுமாமா. புது மாட்டுப்பெண்போல் விர்ரென்று உள்ளே போய்விட்டாள் அம்மா.

"ஏன், என்னசங்கதி?" என்று கேட்டுக் கொண்டு வீசுபலகையில் உட்கார்ந்தார் மாமா.

"நீங்கள் சொன்னவிடமெல்லாம் பார்த்தாயிற்று. அவர்களுக்கெல்லாம் பெண் பிள்ளை டைபிஸ்ட்தான் வேண்டுமாம். டிராம் சார்ஜ்தான் லாபம்."

"சரி நாளைக்குச் சரியாய் எட்டுமணிக்கு ஆத்தண்டை வரச்சொல்லு. ஒரு இடத்துக்கு அழைத்துக்கொண்டு போகிறேன்" என்று எழுந்தார் மாமா.

* * *

"கொஞ்சம் இருங்கோ போகலாம்" என்று ஆரம்பித்தார் அப்பா.

தம்பி செலக்ஷன் பரீட்சைக்கு தமிழ்ச் செய்யுள் பாடம் பண்ணிக்கொண்டிருந்தான். நான் காமரா அறையிலுட்கார்ந்து தினசரிகளிலிருந்து தேவை, என்ற தலைப்புகளை எல்லாம் குறித்துக்கொண்டிருந்தேன். உள்ளே தம்பியின் குரல்.

தையலாம் தைப்பிஸ்தாய்
பிறந்தோமில்லை
கம்பெனியிற் கால்வைத்தே
பிழைத்தோமில்லை.

முதலில் ஏதோ பாடம் உருப்போடுகிறானென்று நினைத்தேன். ராகம்போட்டுப் பாடினான். சற்று நிதானித்தேன்.

கல்லைத்தான் மண்ணைத்தான்
காய்ச்சித்தான் குடிக்
கத்தான் கற்பித்தானா?
இல்லைத்தான் வேலையைத்தான்—.

எழுந்து உள்ளே ஓடினேன். என்னைப் பார்த்து விஷமச்சிரிப்பு சிரித்துக்கொண்டு ஒரே ஓட்டமாக சமையலறைக்கு ஓடினான்.

எனக்கோ அசாத்ய கோபம். துரத்திக் கொண்டே சமையல்றைக்கு ஓடினேன். 'அம்மா அம்மா' என்று பயந்தவன்போல் கூவியவனாய் அம்மாவுக்குப் பின்னால் போய் ஒளிந்துகொண்டான். சனி தொலையட்டும் என்று விட்டுவிட்டு மறுபடி என் வேலையைக் கவனிக்கப் புகுந்தேன்.

உள்ளே அம்பியின் குரல். "அண்ணா! உனக்குக் கோபம் ஆகாதடா!" என்று பாட்டு கேட்டது.

சீ சீ! இந்த வீட்டிலே மனிதர்கள் இருக்க யோக்யதை இல்லை என்று சொல்லிக் கொண்டே பேபரைச் சுருட்டி பீரோவின் மேல் எறிந்துவிட்டு வீதியிலிறங்கினேன்.

* * *

எதிரே கோடியகத்து வைத்தியநாதன், "சரி நல்ல சகுனம்தான், ஒற்றைப் பிராம்மணன்" என்றான் என்னைப்பார்த்து.

"ஏன், எது மட்டும்?"

"ஏன், நீ எதுமட்டும்?"

"உத்தியோக வேட்டைதான்."

"டெம்பிரரி சான்ஸ் ஒன்று, சம்பளம் கிம்பளம் கிடையாது பரவாயில்லையா? சும்மா ஒருமாதமிருந்தால் லீவிலே போனவன் வருவான். இந்தமாதிரி இப்படி ஐந்தாறு தடவை பார்த்தால் பிறகு ஏதாவதொரு "சான்ஸ்" கிடைக்கும்."

"சரி சொல்லேன் பார்க்கலாம்."

"சங்கதி இன்னதென்று ஒருவரிடமும் சொல்லாதே. டெம்பரரிதானே? சும்மா தம்பட்டம் கொட்டுவானேன்? ஏதோ என்னோடு போகிறேன் என்று சொல்லிவை."

"பஸ்சார்ஜ் என்ன ஆகுமோ? அப்பாவை..."

"அதைப்பற்றி உனக்கென்ன? நான் அழைத்துக்கொண்டு போய் இறக்கிவிட்டு நேரே போவேன். என் 'ரூமுக்கு' வா சொல்லுகிறேன்" என்று இழுத்துக் கொண்டு தன்னுடைய அறையில் நுழைந்தான் வைத்தி.

"வேலை என்ன தெரியுமோ? ரேடியோ ஸ்டேஷனிலே டெலிபோன் குமாஸ்தா. டெலிபோனில் என்ன செய்தி வந்தாலும் சரி, பச்சையாய் அப்படியே சொல்லப் படாது தெரியுமோ? கொஞ்சம் அழகுபடுத்திச் சாதுர்யமாய்ச் சொல்லவேண்டும்" என்று கொஞ்சம் பாடம் கற்றுக் கொடுத்தான்.

"சரி சரி சம்பளமில்லாத வேலைக்கே இந்த நிர்பந்தமானல் சம்பளத்தோடு வேலை என்னமாய்த்தானிருக்குமோ?"

"என்ன? என்ன யோசனை? சாயங்காலம் 4 மணிக்கு ஸுட்டைகீட்டை மாட்டிக் கொண்டு வந்துசேர். என்ன?" என்று முதுகிலே ஒரு தட்டு தட்டினான். வீட்டிற்கு கிளம்பினேன்.

வாயிற்படி ஏறினேன். "அவன் எங்கேடா? அந்த சாம்பிராணி எங்கே தொலைந்துபோனான்?" என்று அம்மா விசாரித்துக்கொண்டிருந்தாள்.

சாயங்காலம் வைத்தியுடன் போனேன்.

ஒரு மேஜையண்டை டெலிபோன். போய் உட்கார்ந்தேன்.

சுக்லாம் பரதரம்.

"ஹல்லோ! ஹல்லோ!"

"யாரது?"

"யாரென்று தெரியவேண்டியதில்லை."

"இந்தப் பாடகர் இன்னும் எவ்வளவு நேரம் கொலை செய்வார்?"

குரல் கேட்ட குரல். அம்மாஞ்சி ராமுவின் குரல்தான். பட்டுசொன்ன சங்கதி இதுதான்போலிருக்கிறது என்று எண்ணிக்கொண்டே கீழேவைத்தேன்.

மறுபடி கண கண வென்று மணியடித்தது.

"ஹல்லோ!"

"டெலிபோனண்டை எந்த மடசாம்பிராணி? கேட்டால்கூட பதில் சொல்லுகிறதில்லை. யாரையா பேசுகிறது? மணிப்ரவாள பாஷையோ?"

"இல்லை தமிழ்தான்."

"சரி நாளையிலிருந்து நல்ல தமிழிலே அழச்சொல்லும்."

"சரி தாங்கள் யாரோ?"

பதிலே கிடையாது.

அடுத்த அறையிலிருந்து நல்ல ஹிந்துஸ்தானி ஸங்கீதம் கேட்க ஆரம்பித்தது.

"கண கண கண ஹல்லோ!"

"இது என்ன சங்கீதம்?"

"சங்கீதம் ஹிந்துஸ்தானி."

"பாடகர் பெயர் என்னமோ?"

"பைரவப்பிரசாத் குப்தா"

"பேஷ் நன்றாய் குலைக்கிறார். அடுத்த தடவை குழந்தைகள் புரோகிராமில் போடுங்கள். வயிற்றெரிச்சல் தீர குலைத்துத் தீர்க்கட்டும்......டக்.*சரிதான். என் தம்பியும் வைத்தியும் சேர்ந்துதான்—.

எனக்கு ஒரே குழப்பம். இதே ரீதிதான். மணி ஏழு. இது ரேடியோ ஸ்டேஷனு அல்லவா என்று சந்தேகம் வந்துவிட்டது. போதுமே இந்த உத்யோகம், வீட்டிலே கேட்கிற சாம்பிராணிப்பட்டம் போதாமல் இங்கு வேறு எண்ணிக்கொண்டேன். வைத்தியின் கார் ஹாரன் கேட்டது. எழுந்து வெளியே வந்தேன்.

"ஹல்லோ!" என்றான் வைத்தி. நான் பேசவேயில்லை.

வாயிற்படி ஏறினேனோ இல்லையோ? "ஏண்டா, அம்பி. இவ்வளவுநேரம் எங்கே போயிருந்தாய்? உங்க முத்தண்ணா எங்கே? மூன்றுமணிக்கே போனவன் இன்னும் காணோம். என்னடா கிராமபுனருத்தாரணவிஷயமாய் சில விஷயங்கள் எடுத்து வைத்தேனே அந்தக் கத்தையைக் கொண்டா" என்றார் அப்பா.

அம்பி பரமசாதுவாய் தேடப்போனான்.

சங்கதி இதுதான். அப்பாவுக்குப் பட்டணவாஸம் அலுத்துப்போயிற்று. கிராமத்துக்குப்போய் சொந்த விவசாயம் செய்யப்போகிறார். நாங்கள் பிறந்தது முதல் கிராமத்திற்கே போகவில்லை. இனிமேல்தான் "நெல்காய்ச்சிமரம்" எப்படி இருக்குமென்று பார்க்கவேண்டும். இதற்காகத்தான் என்னைத் தாவர சாஸ்திரம் படிக்கச் சொன்னாராம். இந்த சங்கதி முதலில் தெரியாது. அம்மா ஒருநாள் அடுத்தாத்து மாமியிடம் சொன்னாள். "துவாதசிக்கு பெரிய அம்பியை ஆத்திக்கீரை வாங்கச் சொன்னேன். முருங்கைக்கீரை வாங்கிக்கொண்டு வந்தான். அதனால் ஆராய்ச்சிசெய்து நோபல் பரிசு வாங்குவானென்று தாவரசாஸ்திரம் எடுத்துக் கொள்ளச் சொன்னேன்" என்று சொல்லிக்கொண்டிருந்தாள். இப்பொழுது அப்பாவின் யோசனையைக் கேட்டதும் எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. கூடத்துப் பீரோவுக்கருகில் நின்று உச்சஸ்வரத்தில் "என்ன இத்தனைநாள் பட்டணத்துக் குழாய்த் தண்ணியில் குடியிருந்துவிட்டு இனிமேல் கொட்டையூருக்கு வந்து வாய்க்கால் தண்ணீரும் சுமந்து, மண்தரையை மெழுக என்னால் முடியாது. பிள்ளையாண்டான்கள் பாடு உங்கபாடு. ஏர் உழச் சொல்லுங்கோ. பரம்படிக்கச் சொல்லுங்கோ. என்னால் குப்பைக்காட்டிலே வந்து குடித்தனம் பண்ணிக் குப்பைகொட்ட முடியுமா? இனிமேல் சிவனேன்னு கிணற்றுக்கு எலெக்டிரிக் பம்புவச்சு, வீட்டுக்கும் சிமெண்ட் காங்கிரீட் போட்டுவிடுங்கோ" என்று உத்தரவுபோட்டுக்கொண்டிருந்தாள் அம்மா.

அப்பா தலையைச் சொறிந்துகொண்டார். பொடி டப்பியை எடுத்து ஆற அமர யோசித்துக்கொண்டே பொடிபோட்டுக் கொண்டார்.

---

*சரிதான். இங்கே வந்திருக்கிறேனென்று அவனுக்கு எப்படித் தெரியும்? வைத்தியே சொல்லி—கோட்டா பண்ணச்சொல்லியிருப்பான்.

# கிராமம் திரும்புதல்

(டி. வி. ராமமூர்த்தி)

"சாமி?"

நான் திடுக்கிட்டுத் திரும்பினேன். நான் ஊருக்குத் திரும்பி வந்து இன்னும் ஒரு வாரம் கூடச் சரியாக ஆகவில்லை. எனக்கு அதிகமாக யாரையும் தெரியாது. தெரிந்த பேர்வழிகளில் நிச்சயமாக இவன் ஒருவனில்லை.

"நீ யாரப்பா? எனக்கு தெரியவில்லையே!"

"நீங்க பண்டிதய்யர் வீட்டுப் பேரப்பிள்ளை இல்லீங்களா?" என்றான் அவன் தீனமான குரலில். எத்தனையோ பேர் இந்த மாதிரி என்னைக் கேட்டாய் விட்டது. அதில் இவன் ஒருவன் என்று எண்ணிக் கொண்டே நான், "ஆமாம்-நீ யார்?" என்றேன்.

"என்னைத் தெரிய வில்லையா உங்களுக்கு?"

அவனுக்கு ஆச்சர்யமா யிருந்தது. ஆனால் மறுபடியும் அவன் தன்னைத் தானே திருத்திக் கொள்பவன் போல, "ஆமாம் உங்களுக்கு தெரியாது தான். இந்த ஊரைவிட்டுப் போரச்சே நீங்க பச்ச பிள்ளையா யிருப்பீங்க. அஞ்சு ஆறு வயசு இருக்கும்" என்று கூறி நிறுத்தினான்.

"நீ சொல்வது சரிதான். எனக்கு அப்போ ஆறு வயசுதான்."

"எனக்கு தெரியாதுங்களா! உங்களோடே சதா திரிஞ்சுகிட்டு இருப்பானே"

"அவன் யாரு-அவன் இப்போ என்ன செய்யறான்?" என்று கேட்டேன்.

"அவன் என் பேரப்புள்ளே தானுங்க. அவன் ஒத்தருக்கும் சொல்லாமே கண்டிக்கு போய்ட்டானுங்க. இன்னும் கண்டியிலேதான் இருக்கானுங்க-ரெண்டு மாசத்துக்கு மின்னாலேகூட கூட வந்திருந்தான்" என்றான்.

"இங்கே ஒண்ணும் பிழைப்பு இல்லயா?"

"இங்கே என்ன பொழைப்பு? காலம் வரவர கெட்டுப் போச்சுங்க, முன்னெல்லாம் கலம் அஞ்சு ஆறு வித்துச்சு. யார் கையிலே பார்த்தாலும் காசு தண்ணிமாதிரி புரண்டு கிட்டு இருந்தது. இப்போ கலம் ஒரு ரூபாய்க்கு கேட்பாரத்து கிடக்கு. என்று சொல்லி கொஞ்சம் நிறுத்தினான்' எனக்கு இதைப்பற்றி ஒன்றும் தெரியாததால் ஒரு அபிப்பிராயமும் சொல்லவில்லை. அவனே மேலே சொல்ல ஆரம்பித்தான். "விலைவாசி கிடக்கட்டுங்க, அந்த காலத்து மனுசா தான் இப்போ எங்கே இருக்காங்க? வேறே எங்கேயும் போகவேண்டாம். நம்ப அம்மாவைத் தான் சொல்லுங்க. நானு அப்போ உங்க பண்ணையிலே தான் இருந்தேன். மாட்டை மலையிலே கொண்டு மேச்சுபுட்டு விளக்கு வைக்கர நேரமா வூட்டுக்கு வருவேன். கொட்டாயிலே கொண்டு மாட்டை கட்டிப் புட்டு ரெண்டு வக்கலைப் பிடுங்கி போட்டுட்டு 'வூட்டுக்கு போய்ட்டு வரேன் அம்மா' என்று சொல்வேன். காதுக்குக் குளுமையா பேசி, வூட்டுலே ஏதாச்சும் பலகாரம் பச்சணம் செஞ்சிருப்பாங்க, அதை எனக்கும் கொடுப்பாங்க. வெத்தலை சருவு, புவையிலை எல்லாம் அள்ளி கொடுத்து 'போய்ட்டுவா முருவா' எம்பாங்க. இப்போ யாரு சாமி அதுமாதிரி செய்யறாங்க?"

என் தாயாரைப்பற்றி அவன் சொன்ன வார்த்தைகள் என் ஹ்ருதயத்தில் ஆழமாகச் சென்று தாக்கின.

எனக்கு அப்பொழுது ஆறுவயது. நான் மாம்பழத்தின் ருசியில் ஒன்றையும் கவனிக்கவில்லை. அப்பொழுது சித்திரை மாதம். இரண்டு சாக்கு நிறைய மாம்பழம் கட்டிவைத்திருந்தார்கள். வாசலில் கந்தன் இரட்டைமாட்டு வண்டியில் மாடுகளை பூட்டிக்கொண்டிருந்தான். ஒவ்வொன்றாக மூட்டைகளை வண்டியில் எடுத்துவைத்தார்கள். மாம்பழத்தைக் கூடத்தான்! எங்கள் படிப்பிற்காக திருச்சினாப்பள்ளி போகிறோம் என்று சொன்னார்கள். எங்கள் ஊரில் நாலாவதுக்குமேலே கிடையாது. எங்கள் அப்பாவுக்கோ பையன்கள் எல்லோரும் டாக்டர் என்ஜினீயர் இப்படியாக ஆயிரம் ஐந்நூறு சம்பளம் வாங்கவேண்டுமென்ற ஆசை. ஆகவே வெளியூர்ப் படிப்பினால் ஏற்படும் செலவையும் கஷ்டத்தையும் அனுபவிக்கத் தயாராய் இருந்தார். அதில் என்

தாயாருக்குக்கூட அவ்வளவு இஷ்டமில்லை. அவள் குடித்தனம் பண்ணவந்தபிறகு ஒரு வாரத்திற்குமேல் கிராமத்தைவிட்டு இருந்ததில்லை. தாய்வீட்டிற்குப் போனால் கூட அவ்வளவுதான். அவ்வளவும் என் தகப்பனாரின் கண்டிப்பு. பிரசவம் எல்லாம் கிராமத்திலேதான் நடந்தது. இவ்வளவு காலத்திற்குப் பிறகு கிராமத்தைவிட்டுப் பிரிவது என்றால் என் தாயார் சஞ்சலப் பட்டதில் அதிசயமென்ன? அவள் வண்டியில் ஏறும்பொழுதே தான் அவ்வளவுகாலமாக குடித்தனம் செய்த வீட்டைத் திரும்பித் திரும்பி பார்த்த பார்வை! அதை நேரில் பார்த்து தான் உணரவேண்டும். குழந்தைகள், சம்பத்து எல்லாம் அமோகமாகப் பெருகியது அந்த வீட்டில்தான்! அதைப் பிரிந்து செல்வது நல்லதிற்காகவா அன்றி வீழ்ச்சி அடைவதற்குத்தானா? மூலை திரும்பும் பொழுது அவள் பார்த்த பார்வையிலிருந்து அதுதான் கடைசியாகத்தான் தன் வீட்டை பார்ப்பது என்று அவள் அறிந்திருந்தாள்போலிருந்தது.

பிறகு நடுவில் நடந்தது எல்லாம் அவ்வளவு முக்கியமில்லை. ஸ்ரீரங்கத்தில் தான் குடித்தனம் வைத்தோம். ஒழுங்காகத் தான் கொஞ்சநாள் நடந்துவந்தது. எங்கள் தாயார் எங்களிடமிருந்து பிரிக்கப் பட்டாள். அதுவும் பிரசவ வேதனைக்கு பின் இந்த தொலையா நரகவேதனை. ஒரு உயிர் பிறந்ததும் ஒரு உயிர் பிரிவதின் சித்தாந்தம்தான் என்ன?

இதற்குப் பிறகும் எங்கள் படிப்பு நிற்க வில்லை. தளரா நெஞ்சம் படைத்த என் தகப்பனார் எங்கள் படிப்பின் மேலேயே கவனமாகயிருந்தாரே ஒழிய, வேறு ஒன்றையும் பொருட்படுத்தியதாகத் தெரிய வில்லை. தன் மனைவியை இழந்ததுகூட அவர் பொருட்படுத்தவில்லை.

எங்கள் படிப்பிற்காக அவர் எவ்வளவு தியாகம் செய்தார் என்று எங்களுக்கு அப்பொழுது தெரியாது. முன்னோர்களின் சொத்துதானே என்றுகூட நினைத்தோம். ஆனால் அதை ஆண்டு அனுபவித்தவன் அதை விற்க நேரிடும்பொழுது, அதுவும் கால்வாசி அரைவாசி விலைக்கு விற்கும்பொழுது, எவ்விதம் நெஞ்சு துடிப்பான், அது அவனுக்கு எவ்வளவு வருத்தம் விளைவிக்கும் என்பதை நாங்கள் நினைத்துப் பார்த்ததில்லை.

கடைசியாக எங்கள் படிப்பும் பாதியில் முடிந்தது. எங்கள் தகப்பனார் இதிலேயே மனம் குன்றிவிட்டார். இயற்கையிலேயே நல்ல பூரிப்புள்ள தேகம், இளைத்து விட்டது. உயிர் இருந்தது, ஆனால் உணர்ச்சி தான் இல்லை. அவர் நினைத்திருந்ததென்ன, நடந்தது என்ன? மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசம்.

இதுதான் போகிறது என்றால் ஒரு வேலையாவது கிடைக்ககூடாதா? ஆயிரம் ஐந்நூறு எல்லாம் மூட்டை கட்டி தூரத்தில் வைத்துவிட்டோம். கனவில்கூட நினைப்பதில்லை. ஆனால் முப்பது ரூபாய்! இதற்குக்கூடவா பஞ்சம் வரவேண்டும்? அட கிருஹசாரமே.

பழையபடியும் நாங்கள் கிராமம் வந்து சேர்ந்தோம். ஆனால் அம்மா! அவள் தான் காவிரி அன்னையுடன் கலந்துவிட்டாளே! இவை எல்லாம் சினிமாவில் நடப்பதுபோல் தோன்றி மறைந்தது. கண்களில் ஜலம் வந்து மறைத்தது.

" சாமி! சாமி!"

நான் கண் திறந்து பார்த்தேன். அவன் சாமர்த்தியமாக இந்த பேச்சை எடுக்காமல் " எங்கே புறப்பட்டீங்க இந்நேரத்திலே?" என்றான்.

வெள்ளாற்றின் மணலில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். இருட்டுகிற சமயமாதலால் எதிரேயிருந்த மாந்தோப்பில் பட்சிகள் ஒரேடியாக சத்தம் செய்துகொண்டிருந்தன.

" சும்மா தோப்பைப் பார்த்துட்டு வரலாம்னு கிளம்பினேன் " என்றேன்.

" ஆமாங்க. பாக்கவேண்டியதுதாங்க. இதுதாங்க நம்ப தோப்பு. இரண்டு இளநீர் சாப்புட்டு விட்டு போங்க."

நானும் சரி என்று அவன் பின்னால் போனேன்.

அவன் வரிசையாக ஏழெட்டு இளநீர் சீவி வைத்தான்.

ஆனால் என்னால் மூன்றுக்கு மேல் குடிக்க முடியவில்லை.

அவன் மறுபடியும் ஆரம்பித்தான்.

"உங்க தோப்பை விடவா! அந்த கன்றிலே இருந்து இதுவரைக்கும் யாரு துன்னுட்டு ஒரு குழந்தை புள்ளையே

கேட்டா அதுகூடச் சொல்லும்-பண்டிதை யர் வீட்டுத் தோப்பு என்னு! அதெல்லாம் மாறிப் போச்சு. ஊரிலேயே உங்க பெரிய தோப்பு, மாங்தோப்புக்கு மிஞ்சி கிடை யாது. அதிலே இல்லாத பழம் இல்லே. ஒரு குடித்தனம் அதிலேயே நல்லா பொளேக்கலாம். உங்க அய்யா அத்தைக் கொண்டுபோய் மூவாயிரத்துக்கு வித்துட் டாரு.'' அவன் பெரு மூச்செறிந்தான். அதைச் சொல்லும் பொழுதே அவன் தொண்டை கம்மிக் கொண்டது.

“போன மூணும் வருசம் சாமி! எனக்கு நல்லா நெனப்பிருக்குது. அந்த புதுப் பணக்காரன், எனக்கு விவரம் தெரிஞ்சு மாடு மேச்சபயல். உங்க நிலத்திலே விளேஞ்சத்தே தின்னு வளந்தவன். அவன் கிட்டே உங்க அய்யா இரண்டா யிரம் தோப்பு மேலே வாங்கி யிருந்தாரு. அப்புறம் அவன் “ரூவா கொடு. இல்லாட்டி தோப்பை வித்துடு-நான் வச்சிக்கறேன். இல்லாமப்போனு தாவாபண்றேன்''என்று சொல்லிகிட்டு திரிஞ்சான். உங்க அய்யா-அவரைப் போல மனிசரை-எனக்கும் எழுவது வயசு ஆறது—-நான் பார்த்ததில் லே. நீங்ககூட உங்க ஆயுசிலே பாக்க போறதில்லே. அவ்வளவு தங்கமான குணங்க. இந்த வயசுவரை ஒரு கோர்ட்டு கச்சேரி ஏறினதில்லே. மானத்துக்குப்பயந்துகிட்டு வித்துட்டாரு-ஆனு அந்தப் பயல் எண்ணம் மட்டும் நிறைவேறல்ல. போட்டிமேலே நாலஞ்சு பேரு கூட்டா மூவாயிரத்துக்கு வாங்கிட்டானுக. அதை எல்லாம் நெனச்சா வயிறு பகீர் என்கிது. உங்க அய்யாவுக்கு எப்படித்தா னிருக்குமோ?''

எனக்கு என்ன சொல்வதென்று தெரிய வில்லே. “இதுக்கெல்லாம் மனுசன் என்று இருந்தா பயந்து சாவறதா?'' என்றேன்.

“அதுக்கு இல்லீங்களே. இப்போதான் என்ன? இருக்கறதை வச்சிகிட்டு சாப்பிட முடியாதா? இனிமே யாச்சும் விக்காமே இருக்கணுமே'' என்முன் அவன். அவன் சொன்னதில் உண்மை இல்லாமல் இல்லே.

அத்துடன் ரொம்ப நேரமாகி விட்ட தால் நாளேக்குத் தோப்புக்கு போகலாம் என்று திரும்பி விட்டேன். வீட்டில் இரண்டு மூன்று பேர்-யாரென்றுகூட எனக்குச் சரியாகத் தெரியாது. என் தகப் பனுருடன் பேசிக் கொண்டிருந்தார்கள்.

“ஏதோ இவா படிச்சுட்டா நமக்கு குறச்சலே இல்லேனனுட்டு எல்லாத்தை யும் வித்துவித்து செலவழச்சேன். சுத்த பைத்தியக்காரத் தனமான வேலே செஞ் சுட்டேன். நான் மாத்திரம் இங்கேயே இருந்திருந்தால் ராஜா மாதிரி இருந்திருப் பேன்'' என்று தகப்பனுர் கவலேப்பட்டுக் கொண்டிருந்தார்.


“இப்போதான் என்ன ? பசங்களுக்கு வேலே கிடைக்கிறவரை தான் கொஞ்சம் சிரமம். பிறகு எல்லாம் சரியாய் போயி டாது'' என்று ஒருவர் ஆறுதல் கூறினுர்.

அதில் இன்னும் கொஞ்சம் அனு பவமுடையவர் “வேலே சமாசாரம் எப் படி வேணும்னு இருக்கட்டும். இருக் கறதை வச்சிண்டு சாப்பிட்டாக்கூட போறும். ஆனு குடும்பத்தை நடத்தக் கூடியவ இருந்து நடத்தினு அது வேறே மாதிரி. அவ இருந்தா இது மாதிரி எல் லாம் நடக்க விடுவாளா? இந்தமோ பிராப்தமில்லே. குழந்தைகள் அதுமாதிரி அலேயணும்னு தலே எழுத்து'' என்முர்.

கடைசியாக வழுக்கைத் தலேயுடன் கொஞ்சம் எட்டி உட்கார்ந்திருந்தவர் “என்னமோ போனவாளேப் பத்தி ஏன் பேசறேள் ? போனவா புண்யம் செஞ்ச வான்னு நான் சொல்வேன். கொடுத்துவச் சமகராசி இந்தப் பட்டிகாட்டிலே சாகாமே அந்த காவேரிக் கரையிலேயே மஞ்சக் குங்குமத்தோடே சுமங்கலியா போனதே உத்தமம். இன்னும் இருந்துகஷ்டத்தை எல்லாம் பார்க்காமேபோனு '' என்முர்.

பழையபடி தாயாரின் ஞாபகம் உண் டாகவும் நெஞ்சில் குமுறிக்கொண்டிருந்த எண்ணங்கள் எல்லாம் ஒன்முய் பொங்கி வழிந்தன. கட்டிலில் தலே குப்புறப்படுத் துக்கொண்டு அழுதேன். அழுகையினுல் ஏற்படும் கலகலப்பினுல் ஆத்ம திருப்தி யாவது ஏற்படாதா ?

புழக்கடையில் தகப்பனுர் “ மாட்டுக்கு தண்ணி காமிச்சயா! வைக்கலே போட் டுட்டு விளக்கு எடுத்துண்டுவா '' என்று பண்ணேக்காரப் பையனே மிரட்டிக்கொண் டிருந்தது எங்கோ கனவில் கேட்பதுபோ லிருந்தது. என் தமக்கை—இரண்டாவது தாய்—“ சாப்பிடவாடா இலே போட் டாச்சு'' என்றதும் நான் கண்களே துடைத்துக்கொண்டு எழுந்திருந்தேன்.




# கெட்டிக்காரத்தனம்

(ஸ்ரீ ஆ. வே. ஜெயராமன்)

காவிரிப்பூம்பட்டினம் வியாபாரத்தில் தலைசிறந்து விளங்கிய காலத்தில், அங்கே தனசீலன் என்றோர் ரத்தின வியாபாரி இருந்தான்.

தனசீலனுக்கு ஓர் மருமகன். அவன் ரொம்ப ஏழை. அவனை தனசீலன் பெரும் பணக்காரனாக்க விரும்பினான். ஒரு நாள் தன் மருமகனைக் கூப்பிட்டு, அவனுக்கு வேண்டிய பணங் கொடுத்து வியாபாரம் செய்யச் சொன்னான். ஆனால் அவன் மருமகன் ஓர் பெரிய முட்டாள். பணத்தை வீணான வழியில் செலவழித்துத் திண்டாடினான். மறுபடியும் தனசீலன் அவனுக்கு வேண்டிய பணம் கொடுத்து உதவினான். அப்பொழுதும் அவன் பணத்தை முன்போலவே செலவு செய்துவிட்டு விழித்தான்.

தனசீலனுக்கு வந்துவிட்டது கோபம். "இம்மாதிரியான முட்டாளை நான் வைசிய குலத்தில் எங்கும் கண்டதில்லை இந்த செத்த எலியைக் கொண்டே ஒருவன் பெரும் பணக்காரனாவான்" என்று சொல்லிக்கொண்டே ஓர் மூலையில் செத்துக்கிடந்த எலியை எடுத்துத் தெருவில் எறிந்தான்.

தனசீலனைக் கேட்டுப் பணம் பெற்று வியாபாரஞ் செய்ய வேண்டுமென்றெண்ணி வந்த மாதவன் என்றோர் ஏழை வணிகச் சிறுவன், தனசீலன் தன் மருமகனைக் கோபித்துக் கூறிய சொற்களைக் கேட்டுக் கொண்டிருந்தான். அவன் உடனே ஓடிச்சென்று, விட்டெறியப்பட்ட செத்த எலியை எடுத்துக்கொண்டு "நான் என்னுடைய அதிர்ஷ்டத்தை இந்த செத்த எலியைக்கொண்டு பார்க்கிறேன்" என்று சொல்லிச் சென்றான். இதைக் கேட்ட தனசீலனும், மற்றுமுள்ள அயலார்களும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

எலியை எடுத்துச் சென்ற மாதவன், அதைப் பூனை வளர்க்கும் மளிகைக் கடைக்காரனிடம் கொடுத்து, அதற்குப் பதிலாகக் கை நிறையக் கொத்துக் கடலை வாங்கிக்கொண்டான். அக்கடலையை அவன் சுண்டலாகச் சமைத்து, அதையும் ஒரு பாத்திரத்தில் தண்ணீரையும் எடுத்துக் கொண்டு, நகரத்தின் வெளிப்புறத்தில் ரஸ்தாவில் உட்கார்ந்து கொண்டான். அப்பொழுது பகல் பனிரண்டு மணியாதலால், காட்டிற்குச் சென்று விறகு வெட்டிக்கொண்டு வருபவர்கள் சோர்ந்து தள்ளாடி வந்தார்கள். அவர்களுக்கு மாதவன் தான் வைத்திருந்த சுண்டலையும், தண்ணீரையும் கொடுத்தான். அவர்கள் அதைச் சாப்பிட்டு, மிகவும் சந்தோஷமடைந்து, தாங்கள் வெட்டிக் கொண்டு வந்த விறகுகளில் கொஞ்சம் கொடுத்துச் சென்றார்கள்.

மாதவன் அவ்விறகுகளை எடுத்துச் சென்று, பட்டினத்தில் விற்றுப் பணம் பெற்று, மறுபடியும் கடலைவாங்கி, முன்போலச் சுண்டல் சமைத்து எடுத்துச் சென்றான். முதல் நாள் செய்தது போலவே அன்றும் அதை விறகு வெட்டிகளுக்குக் கொடுத்துப் பணம் சம்பாதித்தான். இவ்விதமாக அவன் ஒவ்வொரு நாளும் செய்து சில வருஷங்களில் நிறையப் பணம் சேர்த்துவிட்டான். அப்பணத்தைக் கொண்டு அவன் ரத்தின வியாபாரம் செய்யலானான். அவ்வியாபாரத்தில் அவனுக்கு நல்ல ஊதியம் கிடைத்தது. பத்து வருஷங்களுக்குள் பெரும் பணக்காரனானான்.

மாதவன் பிறரிடம் "தனசீலன் கூறிய முறையைக் கொண்டுதான் பெரும் பணக்காரனானேன்" என்று தான் கூறுவான்.

# சுதேசிப்பொருட் காட்சி

("வஸந்தன்")

கிறிஸ்துமஸ் வந்ததும்சென்னைப்பட்டணத்தில் எல்லோரும் "எக்ஸிபிஷன் பார்த்தாச்சோ?" என்று முக்கியமாக ஒரு கேள்வி போடத் தொடங்கிவிட்டார்கள். அகில இந்திய சுதேசிப் பொருட்காட்சி கிறிஸ்துமஸின் அவ்வளவு முக்கியமான வேடிக்கையாகப் போய்விட்டது.

பொருட்காட்சிக்குச் சென்று பார்த்தால் அங்கே வேடிக்கை மட்டுமில்லை; நாம் தெரிந்துகொள்ளக் கூடியது எவ்வளவோ இருக்கிறது. சுதேசிப் பொருட்காட்சியென்றால் முன்னெல்லாம் ஏதோ பல்பொடி சோக்புக்கட்டியை வைத்திருப்பார்கள். இந்தக் கண்றாவியைப் பார்க்க வருபவர்களுடைய எக்ஸிபிஷன் தான் பெரிதாக இருக்கும்.

ஆனால் காங்கிரஸ் மண்டபத்தில் சென்ற சில வருஷங்களாக நடைபெறும் பொருட்காட்சியைப் பார்த்து ஜனங்கள் ஆச்சரியப்பட்டுப் போனார்கள். "இவ்வளவு நல்ல சாமான்களை நம் தேசத்திலே செய்கிறார்களா?" என்று வியந்து போனார்கள். இவ்வருஷத்துப் பொருட்காட்சி இன்னும் நமக்குப் பன்மடங்கு திகைப்பையும் அந்த திகைப்பினால் எழும் ஓர் கர்வத்தையும் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

பொருட்காட்சியில் காணப்படும் அழகிய வஸ்திரங்களும், பட்டாடைகளும், கம்பளங்களும், சிற்பங்களும், சித்திரங்களும், வாஸனைத் திரவியங்களும்—எல்லாம் நமது சகோதரர்களால் செய்யப்பட்டிருப்பதைப் பார்த்து நாம் கர்வம் கொள்வது நியாயந்தான். காதிப் பொருட்காட்சியைப் பார்க்கும்போது உண்மையில் கையால் எவ்வளவு அழகான வஸ்திரங்கள் செய்யமுடியும் என்பதை அறிகிறோம். 'இது கதரேயல்ல. மஸ்லின்' என்று சொல்லும்படி நம்மை ஏமாற்றி விடுகின்றன நெசவின் அழகு. பெப்பர்மிட்டாயிலிருந்து எஃகு சாமான்கள் வரையில் எந்த சுதேசி சாமான் வேண்டுமென்றாலும் வாங்கிக் கொள்ளலாம்.

அரசாங்கங்கள் முதற்கொண்டு சாதாரண வியாபாரிவரை எல்லோரும் பொருட்காட்சியில் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்திய சர்க்கார், சென்னை சர்க்கார், மைசூர் சர்க்கார், சென்னை கார்ப்பொரேஷன்-இவர்களின் ஸ்டால்கள் நமது கவனத்துக் குரியவை.

சென்னை சர்க்காரின் காட்டிலாகா அரக்கின் உபயோகத்தை நமக்கு எடுத்துக் காண்பிக்கிறது. மீன் இலாகாவில் பலரகமான மீன்களைப் பிடித்து வைத்திருக்கிறார்கள். இன்னும், தொழில் இலாகா மாணவர்கள் செய்த சாமான்களை நமக்குக் காண்பிக்கிறார்கள்.

மைசூர் சர்க்கார் தங்கள் கைவரிசைகளைக் காண்பித்திருக்கிறார்கள். அவர்களது அழகிய பேர்போன சாமான்களெல்லாம் வெகு அழகாக வைக்கப்பட்டிருக்கின்றன.

சென்னை சுகாதார இலாகா ஸ்டால் முக்கியத்துவம் வாய்ந்தது. போஷாக்கான ஆகாரத்தின் அவசியம் இங்கே வலியுறுத்தப்படுகிறது. நமது கார்ப்பொரேஷன் சென்னையின் ஜல சப்ளை வகையைக் காண்பிக்கிறார்கள்.

இவைகளெல்லாம் நாம் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள். எப்போதுமே தெரிந்துகொள்ளுவது என்பது சிறிது கஷ்டமான கார்யம். ரஸிக்கக்கூடியதைத் தான் நாம் விரும்புகிறோம். ஆகையால் ரஸமான விஷயங்களைப்பற்றி ஆராயலாம்.

கண், மூக்கு, உடம்பு, நாக்கு, செவி—இந்த ஐம்புலன்களையும் திருப்தி செய்விக்கக் கூடியது இந்த பொருட்காட்சி. காங்கிரஸ் மாளிகைக் காம்பவுண்டுக்குள் போய் கண்ணைக் கசக்கிக்கொண்டு ஒரு தடவை மிரள விழித்துப் பாருங்கள்—எதிரில் ஒருவரும் இல்லாதபோது! ஆஹா, எவ்வளவு அழகிய பொருள்கள் காட்சி தருகின்றன! நவரத்தின கஜிதமானவைபோல பல மின்சார விளக்குகள் ஜகஜ்ஜோதியாக ஒளி வீசி இன்பமளிக்கின்றன. எவ்வளவு வர்ணங்களுள்ள வஸ்திரங்கள், புடவைகள்! எவ்வளவு விதம் விதமான முகத் தோற்றங்கள்!

வாஸனைத் திரவியங்கள் எவ்வளவு உங்களுக்கு வேண்டும்? ஸோப்புக்கள், ஜவ்வாது, ஊதுபத்தி எல்லாம் உங்கள் மூக்கைப் பிய்த்துக் கொண்டு போகத் தயாராய் இருக்கின்றன.

பிறகு, மிட்டாய், பிஸ்கோத்து, சாக்லெட் முதலியன நாக்கில் ஜலம் ஊறச் செய்யக் கூடியவை.

இன்னும் உடலுக்கு ஹிதத்தைத் தேடிக் கொள்ள நாம் ஒன்றும் கஷ்டப்படவேண்டியதில்லை. இரவு ஏழு மணிக்குப் பொருட்காட்சி

சாலைக்குப் போனால், அங்கே கடைகளைச் சுற்றிவரும் ஊர்வலத்தில் கலந்து கொள்ளலாம். நெருங்கிய கூட்டமுள்ள இடைவிடாத ஊர்வலத்தில் கொஞ்சம் முந்திப்பிந்தி ஜனங்கள் தள்ள ஆரம்பித்தால் அந்த உணர்ச்சி இன்பமாய் இருக்குமல்லவா?

கடைசியாக செவிக்கு இன்பமளிக்கும் சப்தங்களையும் அங்கே கேட்கலாம். சங்கீதக் கச்சேரிகள் வழக்கம்போல் நடத்துகிறார்கள். ஆனால் இவ்வருஷம் இன்னும் அதைவிட நல்ல சப்தங்களையும் உண்டாக்கி யிருக்கிறார்கள். தெற்குப்புறத்தில் அமைந்திருக்கும் தந்தி இலாகா ஸ்டாலிலிருந்து வரும் 'கட்டுக் கடகட' சப்தத்தைத் தான் குறிப்பிடுகிறேன்.

பொருட்காட்சி சாலைக்குப் போகும் தம்பதிகளுக்கு அங்குள்ள சாமான்களைப் பார்த்ததும் வாங்கவேண்டுமென்று தோன்றும். எவ்வளவு வாங்கினாலும் இன்னும் வாங்காத நல்ல சோப்பு, புடவை தினுசுகள் இருக்கத்தான் செய்யும். அதனால் ஏற்படக்கூடிய நெருக்கடியைத் தீர்த்துக்கொள்ள சில குறிப்பிட்ட நாட்களில் பொருட்காட்சிக்குப் பெண்மணிகளை மட்டும் தான் உள்ளே அனுமதிப்பது என்றும் இன்னும் சில நாட்களில் ஆண்மணிகளை மட்டும் அனுமதிப்பதென்றும் வைத்துக் கொள்ளக்கூடாதா?

"ஆமாம். பொருள் காட்சியாம்! அங்கே என்ன இருக்கு? சோப்பையும் பொத்தானையும் வைச்சுண்டு உக்காந்திருக்கான். வேறே வேலை என்ன?" என்று நமது பாட்டிகள் அலுத்துக் கொண்டு விடாதபடி அவர்களுக்குப் பிரியமாக தோசையை எப்படி சீக்கிரம் வார்க்கலாம் என்றும் காண்பிக்கப்படுகிறது. அங்கே வைக்கப்பட்டிருக்கும் தோசை வார்க்கும் இயந்திரத்தைப் பார்த்து எந்தப் பாட்டியும் மூக்கின்மேல் விரலை வைப்பாள். இப்படி எல்லோருக்கும் பூரண திருப்தி அளிக்கும்படி காட்சிசாலை அமைத்தவர்களுக்கு ஒரு 'ஷொட்டு'க் கொடுத்துவிட்டு

"காட்சி கண் காட்சியே
சிங்கார மாளிகையில்!"

என்ற பழைய பாட்டைப் பாடலாமல்லவா?

---

# பாவ தேவதையின் சரக்கு

[ஸ்ரீ. பெ. நா. அப்புஸ்வாமி]

பாவதேவதையின் வேலையாள் ஒருவன் ஐந்து பொதிமாடுகளின் முதுகு நிறைய மூட்டைகளை ஏற்றிக்கொண்டு போனான். அப்பொழுது எதிரே வந்த தேவதூதன் அவனைக் கண்டான்.

'இவ்வளவு சரக்கையும் தூக்கிக் கொண்டு எங்கே போகிறாய்?' என்றான் தேவதூதன்.

'பூலோகத்துக்கு. அங்கே போய் வியாபாரம் செய்ய' என்று பதில் சொன்னான் பாவதேவதையின் ஆள்.

'அப்படி விற்கும்படியாக என்ன அருமைச் சரக்கு அது?' என்றான் தூதன்.

'இதோ, இந்த மாட்டின் மேல் போட்டிருக்கிற மூட்டையில் இருப்பது கொடுங்கோன்மை.'

'கொடுங்கோன்மையா? அதை யார் வாங்குவார்கள்?'

'அரசர்கள் — இதோ, இந்த இரண்டாவது மாட்டு முதுகின் மேல் கிடப்பது கர்வம்'

'அதை யார் வாங்குவார்கள்?'

'பிரபுக்கள் — இதோ இந்த மூன்றாவது மாடு முதுகு நிறைய இருப்பது பொறாமை.'

'அதை யார் வாங்குவார்கள்?'

'பண்டிதர்கள்— இந்த நாலாவது மாட்டின் மேல் வைத்திருக்கிற மூட்டையிலுள்ளது ஏமாற்றம்.'

'அதை யார் வாங்குவார்கள்?'

'வியாபாரிகள்—இந்தக் கடைசி மாட்டின் மேலுள்ள பொதி நிறையக் கபடம்.'

'அதை யார் வாங்குவார்கள்?'

'பெண்கள்!' என்று சொல்லி விட்டு மாடுகளை ஓட்டிக் கொண்டு போனான் பாவ தேவதையின் வேலையாள்.

(அரபிக்கதை யொன்றில் கண்டபடி)

# சிறுவன் மனம்

[பன்றி மேய்க்கும் சிறுவன் அடுத்த ஊரிலிருந்து வந்திருக்கும் தனது சினேகிதனிடம் சொல்லுகிறான்.]

ஏருங் கலப்பையுமில்லாமல்—அது
என்னமாய் உழுதுட்டுப்போகுதடா!

சேருஞ் சகதியுங்கண்டுவிட்டால்—அங்கு
சென்று படுத்து புரளுதடா!

ஒருபிள்ளையை வளர்ப்பதற்கு—அம்மா
உலகமெல்லாஞ் சுற்றிசாவுறாளே!

'சரிய' குட்டியைப்போட்டுவிட்டு—அது
சாவவாசெய்யுது தின்பதற்கு?

குட்டிகள்எத்தனைபோட்டாலும்-வருத்தம்
கொள்ளவேசெய்யாது போலுக்கடா!

எட்டியும் அம்மாமிதிக்கிறடா—'உன்னை
ஏன்பெற்றேனெ'ன்றென்னை ஏசுறடா!

பெருமாள்சாமியும் முன்னாளில்—இந்த
பன்றியைப்போலவும் ஆனாராண்டா!

கருப்பனிடமதைக் கேட்டுப்பாரு—பெரிய
கதையாய்நீட்டியே சொல்லுவாண்டா.

வாலிலேவெள்ளை கிடக்குதுபாரு—அதை
வேம்படிமாடனுக்கு வெட்டணுமாம்.

காலிலேவிழுந்து வேண்டினேண்டா-அப்
காரித்துப்பி அடிச்சிட்டாண்டா! [பன்

வளத்தவதக்கொல்லவும் வேண்டாமென்
[றால்—அப்பன்
விசனத்தாலென்னை அதட்டுறாண்டா

எளவுசாமிக்கு வெட்டாவிட்டால்—அது
என்னடாநம்மை செய்துவிடும்?

கொட்டுமேளங்கள் அடித்தாலும்—நாளை
கோயிலுக்கு நாம் போகாண்டாடா!

'சட்டுனு' வீட்டுக்குப்போயிடுவோம்—
[வெயிலும்
சாஞ்சி மலைக்குள்போவுதடா!

—து. பா. வேங்கடாசலம்.

---

## விக்ஞானத்தின் பயன்

சமூகத்தைப் பற்றியே நினைக்காமல் தன்னுடைய சந்தோஷத்தையும் நாகரீகத்தையுமே பெரிதாக எண்ணும் எந்த சாஸ்திர ஆராய்ச்சியாளனும் இந்த தேசத்தில் வசிக்கலாயக்குள்ளவனல்ல. இந்தியாவில் பட்டினி கிடக்கும் பல்லாயிரக்கணக்கான ஜனங்களிலிருந்து நம்மைப் பிரித்துக் கொள்வது தவறு. நாம் அவர்களுக்கு ஏதோ சிறிது உதவி செய்ய விரும்புகிறோம். இந்தப் பிரச்னையில் நமது கவனத்தைச் செலுத்துகிறோம். அறிவிற்காக ஆராய்ச்சி செய்யும் அறிவாளிகளால்தான் சமூகத்திற்குப் பெரும் நன்மையைச் செய்ய முடியும் என்பது என் கருத்து. சாஸ்திரஞானம் உள்ளவர்கள்தான் தாராளமாய் மனிதவர்க்கத்திற்கு உதவி செய்யமுடியும். ஒரே ஒரு விஷயத்தை ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு உண்மையான விக்ஞான சாஸ்திரி மற்றொருவர் சொல்லுகிறபடி ஆட விரும்ப மாட்டான். நீங்கள் சொல்கிறபடி கேட்க வேண்டுமென்றால் அந்த விக்ஞான சாஸ்திரியிடமிருந்து உத்கிருஷ்டமானதை எதிர்பார்க்க முடியாது. இந்தியாவின் எதிர்காலம் விக்ஞானமுன்னேற்றத்தின் எதிர்காலத்தைப் பொறுத்திருக்கிறது. மனித முயற்சியின் உயர்ந்த இலட்சியம் எளிய வாழ்வாகத்தான் இருக்க வேண்டும். நாம் தவறான வழியில் ஆரம்பித்து இந்தியாவின் மூலப் பொருள்களைக் கொண்டு மோட்டார் போன்ற பகட்டுப் பொருள்களை உற்பத்தி செய்தால் நாம் குற்றம் செய்தவர்களாவோம். பட்டினி கிடக்கும் பல்லாயிரக் கணக்கான ஜனங்களை நோக்குமிடத்து அந்தத் தொழில்கள் உபயோக மற்றதாகத் தோன்றுகிறது. கிராமத்திலிருக்கும் ஏழைகளுக்கு உபயோகமாகக்கூடிய சாமான்களைச் செய்வதில் சாஸ்திரத்தை உபயோகிக்க வேண்டும்.

இயந்திர சக்திக்கும் கைத்தொழிலுக்கும் போட்டி இருக்க வேண்டும் என்பதில்லை. தன் வயலுக்குத் தண்ணீர் இறைக்க விவசாயி கிணற்றிலிருந்து இழுத்துக் கொள்வது நல்லது. ஆனால் மின்சார சக்தியின் உதவியால் அவன் தன் விளைச்சலை அதிகப்படுத்திக் கொள்ளலாம். சாஸ்திரம் மனிதனுக்கு பெரும் ஒத்தாசை செய்ய முடியும். மனிதனுக்கும் சாஸ்திரத்திற்கும் பகைமை இருக்க வேண்டியதில்லை.

—ஸர். ஸி. வி. ராமன்.

விமர்சனம்:

# "தெருப் பாடகன்"

(ஸ்ரீ. ரா. ஆறுமுகம்)

"நான் மூன்றுநாளாய் 'ஸ்டாருக்குப்' போகப் பார்க்கிறேன். டிக்கட் கிடைக்க வில்லே, சார்! அடேயப்பா என்ன கும்பல்!" என்ருர் ஒருவர் டிராமில். ஸ்டாருக்கு உடனே போகும்படி தூண்டியது அவ் வார்த்தைகள்.

'நியூ தியேட்டர்ஸ்' படமென்ருல் சினிமாப் பிரியர்களுக்கு ஒரு சங்கீத விருந்து. அதிலும் சைகாலும், கானன் பாலாவும் சேர்ந்து ஒரே படத்தில் பாடகர்களின் வேடந்தாங்கியே வரும்போது கூட்டத்திற்குக் கேட்கவேண்டுமா?

புல்வா (சைகால்) சிறுவயதில் ஒரு நாடோடி. நாடகக் கம்பெனியிலிருந்து துரத்தப்பட்டு ஓடிவரும்போது ஏதோ ஓர் வீடு தீப்பற்றி எரிவதைக் கண்டு அங்கு நுழைந்து மன்ஜூ (கானன் பாலா)வைக் காப்பாற்றி அவளுக்குப் பாடவும் ஆடவும் கற்றுக்கொடுத்து தன்னுடன் அழைத்துக்கொண்டு கல்கத்தாவிற்குச் சென்று இருவரும் 'தெருப்பாடகர்'களாக மாறிவிடுகிருர்கள். இவர்களின் இனிமையான சாரீரத்தைக் கேட்டு அவ்வூரிலுள்ள தியேட்டர் மானேஜர் அமர்சந்த் (ஜகதீஷ்) என்பவர் தன்னுடைய நாடகத்தில் மன்ஜூவுக்கு ஓர் உன்னதஸ்தானம் கொடுத்து அவர்கள் வாழ்க்கையை மாற்றி விடுகிருர். அவரது கருணையால் பாடகர்களின் குடிசை மாட மாளிகையாகவும், சாதாரண ஹார்மோனியம் பியானேவாகவும், கழுத்தில் கிடந்த பாசிகள் நன் முத்துகளாகவும்............மாறுகின்றன. நாளடைவில் மானேஜர் மன்ஜூவைக் காதலிக்கிருர்—இல்லே, அந்த எண்ணத்தை அவளுக்கு மறைமுகமாகத் தெரிவிக்கிருர். ஒரு நாள் புல்வர் மஞ்சுவின் நடத்தையில் சந்தேகமுற்று தன் இணை பிரியாத ஹார்மோனியப் பெட்டியை மாத்திரம் எடுத்துக்கொண்டு அவளுக்கும் தெரியாமல் வீட்டைவிட்டுப் போய்விடுகிருன். தன் மானேஜரின் உதவியைக் கொண்டே தன் காதலனேக் கண்டுபிடிக்கிருள் மன்ஜூ.

இதுதான் கதையின் முக்கிய கருத்து ஆனல் இதைத் தட்டித் தட்டி தகடாக நீட்டி 14,500 அடிக்குமேல் எடுத்திருக்கிருர்கள். 13 பாடல்களு மிருக்கின்றன.

அப் படத்தைப் பார்த்து முடிந்ததும் "பூ! இதற்குத்தான இவ்வளவு கூட்டம்! இத்தனே தடபுடல்களான விளம்பரங்கள்!" என்று ஒவ்வொருவர் மனதிலும் எண்ணங்களேற்படும். ஏதோ 4 பாட்டுகள்தான் செவிக்கினிமை யளிக்கின்றன. 'வித்யாபதி'யிலும், 'முக்தி'யிலும் நடித்த கானன்தான இவள் என்று நாம் தயங்க வேண்டியதாயிருக்கிறது.

ஆனல் ஒருசில இடங்களில் அவளுடைய நடிப்பு நம்மைப் பிரமிக்கச் செய்யாமலுமில்லே. இடது கையிலிருக்கும் கரும்பை 'கடுக்'கென்று ஒரு கடிகடித்துமென்று கொண்டே மற்ருெரு கரத்தை நீட்டி பிச்சை கேட்கும்போதும், மானேஜர் பிச்சைக்காரிக்கு ஒரு ஐந்து ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுக்கும்போதும்; தியேட்டரில் நூற்றுக்கணக்கானவர்களின் முன்னிலேயில் முதன்முதலாக வந்து பாட அஞ்சும்போதும் தன் இணைபிரியாக் காதலன் பிரிந்துவிட்டதாக அறியும் போதும், கானன் பாலாவின் உணர்ச்சி மிகுந்த நடிப்பை நாம் போற்ருமலிருக்க முடியாது.

சைகாலின் சங்கீதம் நமக்கு ஒரு பெரிய ஏமாற்றம்தான். இதற்குமுன் எத்தனேயோ படங்களில் நம் செவிக்கு அமுதவர்ஷத்தைப் பொழிந்த இவர் இதில்—'பாடகர்' என்று மகுடமிட்ட இப் படத்தில்—என் இப்படி 'சுமாராக' பாடி யிருக்கிருரோ தெரியவில்லே. 'தெருப் பாடகன்' தானே; எப்படிப் பாடினுல்தானென்ன, என்று நினேத்து விட்டார்போலும். ஆனல் நம் தினசரி வாழ்கையில் கேட்கும் தெருப் பாடகர்களின் சங்கீதம் இந்த சைகால் பாடுகின்றதைக் காட்டிலும் எவ்வளவோ உயர்ந்த ரகமாயிருக்கிறதே!




## ஸ்தல ஸ்தாபனங்கள்

பஞ்சாயத்துகளையும் முனிசிபாலிடிகளையும் தவிர மற்றெல்லா ஸ்தல ஸ்தாபனங்களையும் எடுத்துவிடவேண்டும். ஒரு பத்து வருஷ திட்டம் போட்டு பஞ்சாயத்துக்களும் முனிசிபாலிடிகளும் கட்டாயமாக எங்கும் ஏற்படும் படி செய்யவேண்டும்.

* * *

இந்தப் பஞ்சாயத்துகளிலும் முனிசிபாலிடிகளிலும் வயது வந்தவர்களுக்கெல்லாம் ஓட்டுரிமை இருக்கவேண்டுமென்பது என்னுடைய தீர்மானமான கொள்கை.

* * *

முனிசிபாலிடிகளில் பாலட் பெட்டி முறை மூலம் தேர்தல் நடக்கலாம். சென்னையில் இருப்பதுபோல பல கட்சிகளுக்கும் வர்ணப் பெட்டிகள் ஏற்படுத்தலாம். அதில் இருக்கும் குற்றம் குறைகளை சுலபமாக நீக்கிவிடலாம்.

கிராமங்களில் ஓட்டெடுக்கும் முறை முன்னொரு தடவை காந்திஜி சொன்னதுபோல இருக்கலாம் என்று எனக்குத் தோன்றுகிறது. ஓட்டர்களாயுள்ள கிராமத்தார்கள் எல்லோரையும் ஓரிடத்தில் கூட்டி அபேட்சகர்கள் பெயரை உரக்க வாசித்துக் காட்டவேண்டியது. ஒவ்வொரு அபேட்சகரும் தன் கட்சியின் வேலைத் திட்டத்தை ஐந்து அல்லது பத்து நிமிஷங்கள் விளக்கிக்கூற அனுமதிக்கப்படலாம். பாரபட்சமற்ற தலைவர் ஒருவரைத் தேர்ந்தெடுத்து ஓட்டு எடுக்கச் சொல்லலாம். அந்தந்த அபேட்சகர்களை ஆதரித்து ஓட்டர்கள் கை தூக்கவேண்டும். குறைந்த ஓட்டுகள் பெறுகிறவர்கள் பெயர்களை நீக்கிக் கொண்டே வந்து ஒரு தனி அபேட்சகர் பெருவாரியான ஓட்டுகள் பெறும் வரை கணக்கெடுப்பது நல்ல முறை. இது கிராமங்களுக்கொத்ததான முறை. இதன் மூலம் லாயக்கானவர்கள் தான் வெற்றிபெற முடியும். பணச்செலவும் கிடையாது. சிரமும் கிடையாது.

* * *

முனிசிபாலிடிகளே சில வினியோகத் தொழில்களை நடத்தினலொழிய முனிசிபல் பொருளாதார நிலை அபிவிருத்தி அடையாது. உதாரணமாக நகரத்தின் பால் சப்ளையை முனிசிபாலிடியே ஏன் செய்யக்கூடாது? அதனல் பணமும் வரும்; சுகாதாரமும் அபிவிருத்தி அடையும். பஸ், டிராம் எல்லாம் முனிசிபாலிடியே நடத்தவேண்டும். சினிமா முதலியவைகளிலும் இதே பிரகாரம் செய்யலாம். பாங்கிகளும் இன்ஷியூரென்ஸும் கூட நடத்தலாம்.

—ஸ்ரீ. எஸ். சத்தியமூர்த்தி.

## புதுமைப் பெண்

தற்காலப் பெண்கள் தங்களுக்கு அரை டஜன் காதலர்கள் இருக்கவேண்டு மென்று ஆசைப்படுகிறார்கள். காற்று, மழை, வெயில் இவைகளிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அவர்கள் உடுத்துவதில்லை; பிறர் கவனத்தைக் கவரத்தான் உடை உடுத்துகிறார்கள். இயற்கையாக இருப்பதை விட்டு வர்ணங்களைப் பூசிக்கொண்டு பிரமாதமாய் இருக்க விரும்புகிறார்கள். இந்தமாதிரிப் பெண்களுக்கு அஹிம்சை கட்டி வராது.

இப்பொழுது நாம் கவனிக்கவேண்டிய விஷயம் என்னவென்றால் இளைஞர்கள் பெண்கள் கண்டு பயப்படும்படி ஏன் சாதாரண மரியாதைக்கூட இல்லாமல் இருக்கிறார்கள் என்பதுதான். இளைஞர்களில் பெரும்பாலோர் தங்கள் கௌரவ புத்தியை இழந்துவிட்டார்கள் என்பதைக் காண நான் வருந்துகிறேன். ஆனல் அவர்கள் தங்கள் கௌரவத்தைப் பெரிதாக மதிக்கவேண்டும். ஒவ்வொரு பெண் மணியின் கௌரவமும் தங்கள் சகோதரிகளின் தாய்மாரின் கௌரவத்தைப்போல் மேலானது என்பதை அறியவேண்டும். நல்ல நடத்தையைக் கற்றுக் கொள்ளாவிட்டால் அவர்கள் படித்ததெல்லாம் வீண்தான்.

—காந்திஜி

## ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை

முஸ்லீம்கள் எதிர்க்கும் எதையும் என் சம்பந்தப்பட்ட மட்டில் நான் விரும்பவில்லை. அநேகர் எதிர் பார்ப்பதை விட சீக்கிரமாகவே ஹிந்து முஸ்லீம் பிரச்னை தீர்க்கப்

படும் என்பது எனது நம்பிக்கை. பக்ஷபாதமின்றி நிலைமையை நான் பார்க்கமுடியும் என்று கூறுகிறேன். நமது சச்சரவில் விஷயமே இல்லை. வேற்றுமையின் காரணங்கள் லேசானவை; ஆனால் நமக்குள் இருக்கும் ஐக்கிய பாவம் ஆழமானது, நிரந்தரமானது. ராஜீய, பொருளாதார அடிமைத்தனம் நமக்குப் பொதுவானது. ஒரேவித சீதோஷ்ணம், ஒரேவித நதிகள், அதே வயல்கள், காற்றையும் உணவுப்பொருள்களையும், நீரையும் கொடுக்கின்றன. தலைவர்கள் என்ன சொன்ன போதிலும், ஜனங்கள் விழித்தெழுந்துவிட்டால் ஒன்று சேர்ந்து பொதுவான தீமையை ஒழிக்கப் போராடுவார்கள்.

—காந்திஜி.

## விசுவரூபம்

ஆங்கிலேயர்கள், துரியோதனன் ஸ்ரீகிருஷ்ணனின் விசுவரூபத்தைக் கண்டதுபோல காங்கிரஸின் விசுவரூபத்தைக் கண்டு விட்டார்கள். எங்கு பார்த்தாலும் அவர்களுக்குக் காங்கிரஸாக இருக்கிறது; நடுங்குகிறார்கள். இப்பொழுது காங்கிரஸிற்குள் சில சச்சரவுகள் இருக்கின்றன என்று அவர்கள் கொஞ்சம் தைரியமடைந்தும் இருக்கிறார்கள். ஹிட்லரின் வழியில் ஜாதி துவேஷம் ஒரு சிறந்த சாதனம்போல வளர்ந்தால் ஆங்கிலேயர்களுக்கு இன்னும் தைரியம் ஏற்படும். ஆகையால் காங்கிரஸ் மறுபடியும் தன் விசுவரூபத்தைக் காட்டவேண்டும். அப்பொழுதுதான் காங்கிரஸிற்குப் பழைய பலம் வரும்; சத்துருக்கள் அதைக் கண்டு கலங்குவார்கள்.

—ஸ்ரீ ஸி. ராஜகோபாலாச்சாரியார்.

## காந்தி ஒரு பாஸிஸ்டா?

கொஞ்ச நாளைக்கு முன்னால் ஒரு அகில இந்தியத் தலைவருடன் நான் பேசிக் கொண்டிருந்தேன். அவர் ஒரு தீவிர ஸோஷலிஸ்ட். நாங்கள் பேசிக் கொண்டிருக்கும்போது அவர் காந்தியை பாஸிஸ்ட் என்று குறிப்பிட்டார். நான் சண்டைபோடும் மனோபாவத்தில் அப்போது இல்லாததால் அவர் கூறியதை ஆக்ஷேபிக்கவில்லை. காந்திஜியைப் பற்றி இன்னும் பலரும் மேற்சொன்ன அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்களாகையால் இதைப்பற்றி அலசிப் பார்த்துவிடுதல் நல்லது.

பாஸீஸம் என்றால் என்ன? அது மிதமிஞ்சிப்போன முதலாளித்துவம். முதலாளிகள் கையில் அதிகமான பணத்தை குடியேற்ற நாடுகளில் உபயோகமான வியாபாரத்தில் போடுகிறார்கள். இதைத் தொடர்ந்து ஏகாதிபத்தியம் ஏற்பட்டு விடுகின்றது. இரண்டாவதாக, பாஸிஸம், அரசாங்கத்தின் கையில் ஒன்று திரண்ட அதிகாரம் இருப்பதை ஆதரிப்பதால் வர்க்கப்போரை எதிர்க்கிறது. அதாவது தற்கால முதலாளித்துவத்தின் முக்கிய தீமைகளைப் போக்க முயல்கிறதேயல்லாமல் சமூகத்தை அடிப்படையாக மாற்ற அது தயாராய் இல்லை. மூன்றாவதாக, இரத்தம் சிந்தும் கொள்கையை அது மேன்மைப்படுத்துகிறது. உலகத்தில் வெற்றியடைய மட்டுமல்லாமல் ஆத்மீகச் செல்வத்தை அடைவதற்குக்கூட பலாத்காரந்தான் சிறந்த வழி என்று அது பிரசாரம் செய்கிறது.

காந்திஜியை எடுத்துக் கொள்வோம். பொருள் தேடவேண்டுமென்ற ஆசை அவருக்கு இல்லை. சில வருஷங்களுக்கு முன்னால், சில நாணயங்களைச் சேர்த்துவைத்திருந்ததற்காக அவரது மனைவியார் காந்திஜியின் கோபத்துக்குள்ளான விஷயத்தை ஜனங்கள் மறந்திருக்கமாட்டார்கள். ஆகவே, தனிப்பட்ட நபர்கள் பணம் சேர்க்கும் முறையைக் கண்டிக்கும் காந்திஜி முதலாளித்துவம் தேசியக் கொள்கையாக இருப்பதை ஆதரிப்பார் என்று நாம் எண்ணுவது தவறு. ஆயுள் பரியந்தம் ஒழிவின்றி ஏழைகளுக்காகப் போராடும் காந்திஜி அவர்களை நசுக்கக்கூடிய ஒரு கொள்கையை ஆதரிப்பார் என்று சொல்வது அபத்தமாகும். அபீஸீனிய யுத்தத்தின் போது இதாலியையும் சூடன்லாந்தை அடிமைப்படுத்திய ஜெர்மனியையும் கண்டித்திருப்பது அவர் பாஸீஸத்தை ஆதரிக்கிறார் என்ற கொள்கையை பொய் என்று நிரூபிக்கிறது.

ஆனால் காந்திஜி வர்க்கப்போரை ஆதரிக்காததால் எல்லா அதிகாரமும் கொண்ட சர்க்கார் உண்டாவதை ஆதரிக்கிறார் என்று கூறலாம். இந்த ஹேஷ்யம் சரியென்று தோன்றக் கூடும்; ஆனால் நிலைமையை ஆராய்ந்தால் தவறை உணர்வோம். காந்திஜியின் சமூக, பொருளாதாரக் கொள்கை புரட்சிகரமானதென்றும் அவரது அருமையான கொள்கையான 'அஹிம்ஸை' மட்டும் காப்பாற்றப்பட்டால் இன்னும் வெகு தூரம் முன்னேறுவாரென்றும் ஜவஹர்லால்நேரு அடிக்கடி கூறியிருக்கிறார். விஷயத்தின் உண்மை இதுதான். பலாத்காரமான ஸோஷலிஸத்தை அவர் எதிர்ப்பதன் காரணம் அதன் லக்ஷியத்திற்காக அல்ல; வழிக்காகத்தான். வர்க்கப் போரால் உண்டாகக்கூடிய ரத்தத்தில் தன் தேசம் மூழ்கும் என்பதை நினைக்க அவர் ஆத்மா நடுங்குகிறது. சமாதான வழியிலும் நியாய புத்தியாலும் ஸோஷலிஸம் வந்தால், காந்திஜி மனப்பூர்வமாக முதன் முதலில் அதை வரவேற்பார். அஹிம்ஸை காந்திஜியின் 'வாழ்க்கைச்

சட்டம்'; எதற்காகவும் அதை விட்டுக் கொடுக்க முடியாது. பாஸிஸ்ட் கொள்கையின் மூலாதாரமான பலாத்காரத்தின் நேர் மாருன அஹிம்ஸையை வலியுறுத்தும் காந்திஜியை ஹிட்லர் அல்லது முஸோலினியைப் போன்ற பாஸிஸ்ட் என்று கூறுவது அபத்தமல்லவா?

காந்திஜியின் லக்ஷியம்தானென்ன? ஆம்; அவர் மாஸ்கோ ஸோஷலிஸ்டு அல்ல. இதை அவரே அடிக்கடி வெளியிட்டிருக்கிறூர். ஆனல் அவரது லக்ஷ்யத்தைப் பற்றித் தீர்மானமாக அவர் இதுவரை வெளியிடவில்லை. காந்திஜியின்வாழ்க்கையையும்,அவரது மொழிகளையும் ஆராய்ந்தால் அவர் ஒரு ஸோஷலிஸ்டு என்று சொல்வது மிகையாகாது. பலாத்காரப் புரட்சியை ஆதரிக்காத எத்தனையோ ஸோஷலிஸ்டுகள் இருக்கிறூர்கள். காந்திஜி சமூக நியாயத்தைக் களங்கமற்ற அபிமானத்தாலும் வேண்டுகோளாலுமே உண்டாக்கி விடலாம் என்று கூறுகிறூர். சாதாரண ஜனங்களுக்கு அது அசாத்தியமாகத் தோன்றலாம். ஆனல் சபர்மதி சந்நியாசிக்கு அது நிச்சயமான உண்மையாகத் தெரிகிறது. அவரது ஆத்மீக ஆயுதங்கள் மனிதனின் கஷ்டங்களைத் தீர்க்கக் கூடுமென்று அவர் நம்பிக்கை. காந்திஜியை பாஸிஸ்டென்று கூறுவது குழப்பமடைந்த மூளையைக் காண்பிக்கிறது.

—"இந்தியன் அபேர்ஸ்"

## ஜெர்மனியின் சக்தி

இத்தாலிக்கும் ஜெர்மனிக்கும் பிரான்ஸ், பிரிட்டன் இவைகளுக்கிருந்ததை விட ஆறு பங்கு அதிகமாகவே ஆகாயப்படை இருந்ததென்று அமெரிக்க யுத்த இலாகா நிபுணர்கள் கூறுகிறூர்கள். இந்தக் கணக்கு அரசாங்கத்தரால் மதிக்கப்படுகிறது.

சென்ற நவம்பர் மாதத்தில் ஜெர்மனி ஆயிரம் விமானங்களை செய்திருப்பதாகவும், ஆனல் பிரிட்டனின் மாத சராசரியான 250 சென்ற வருஷம் இரட்டிப்பான போதிலும் ஜெர்மனியில் சரிபாதி அளவுதான் என்றும் நிபுணர்கள் கூறுகிறூர்கள். அமெரிக்கா மாத உற்பத்தி 350. இதாலி 250. பிரான்ஸ் இதாலியைவிட குறைச்சல்.

ஜெர்மனியின் ஆகாய விமானத் தொழிலில் 4,00,000 பேர்கள் ஈடுபட்டிருக்கிறூர்கள் என்றும் ஆனல் அமெரிக்காவில் 36,000 பேர்கள் தான் இருக்கிறூர்கள் என்றும் அறிக்கை கூறுகிறது.

—ராய்ட்டர்.

## நாகரீக மோஹம்

பள்ளிக்கூடத்தில் பாடம் தயாரிக்கும்போது ஒரு விஷயத்தை ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும். மிதமிஞ்சிய அர்த்தமற்ற மேனூட்டு நாகரீகம் நமது தலைமுறையின் பலரது பழக்க வழக்கங்கள், உடை, கலை, ருசி, மனப்பான்மை இவைகளை மாற்றிவிட்டது. அது இந்திய வாழ்வின் ஐக்கிய பாவத்தை நாசமாக்கி விட்டது; அதனுல் ஒரு பயனும் இல்லை.

—ஸ்ரீராணி ராஜ்வாடி.

பிரிட்டன் தனது சாம்ராஜ்யத்தை சுயேச்சை நாடுகளாக்குவதன் வழியே ஜனநாயக நாகரீகத்திற்கு உழைக்கலாம். அது உலக சமாதானத்துக்கு ஒத்தாசையாயிருக்கும் இப்போது உலகம் இருக்கும் அபாயநிலையில். மூன்று தேசங்கள் பலாத்காரத்தைக் கொள்கையாகக் கொண்டு ஒத்து வேலை செய்யும்போது, பிரிட்டன் சுயேச்சையில், ஜனநாயகத்தில் தனது நம்பிக்கையை ஊர்ஜிதம் செய்யவேண்டும்; வார்த்தைகளால் அல்ல; குடியேற்ற நாடுகளுக்கு இக்கொள்கையை ஒட்டி ஒற்றுமையும் உருவும் கொடுத்து காரியத்தால் காண்பிக்கவேண்டும்.

இந்தியாலிலுள்ள பல வகுப்பாளருக்கும் பல மாகாணங்களுக்கும் பல சமஸ்தானங்களுக்கும் ஒற்றுமை உண்டாகும்படி ஒரு 'மத்ய' அரசியல் திட்டத்தை வகுக்க வேண்டியது அவசரமான காரியமாகும். அதன் இஷ்டமின்றி இந்தியாவின் மீது ஒரு அரசியல் திட்டம் சுமத்தப்பட்டால், இந்தியா சுயேச்சை நாடல்ல என்று தான் அர்த்தம்.

* * *

சீக்கிரமே இந்தியாவை பலம் பொருந்திய சுயேச்சை நாடாக பிரிட்டன் செய்யாமல் போனல், அநேக பெரிய சாம்ராஜ்யங்கள் அழிந்துபோனதைப் போல் பிரிட்டனும் நாசத்திலிருந்து தப்ப முடியாது.

* * *

தன்னுடைய நலத்தை உத்தேசித்தும் கண்ணியத்தையும் நியாயத்தையும் உத்தேசித்தும் இங்கிலாந்து இந்தியாவில் சுயேச்சை அரசாங்கத்தை ஏற்படுத்தியாக வேண்டும்.

—ஸர் ராதாகிருஷ்ணன்

# புத்தக விமர்சனம்

## இரட்டை மனிதன்

பிரபல ஆங்கில ஆசிரியர் ஸ்ரீ. ஆர். எல். ஸ்டீவன்ஸனின் 'டாக்டர் ஜெகிலும் மிஸ்டர் ஹைடும்' என்ற நவீனத்தை 'இரட்டை மனிதன்' என்ற தலைப்பில் மொழி பெயர்த்திருக்கிறார் கு. ப. ரா. முதல் நூலின் கருத்து மங்காமலும் நடை சீர் குலையாமலும் மொழி பெயர்ப்பது மிகவும் கடினமான வேலைதான். சாதாரணமாக மொழி பெயர்ப்பின்போது வார்த்தைகளுக்காக ஆசிரியர்கள் மலையைக் கெல்லி எலியைப் பிடிப்பது வழக்கம். கடைசியில் பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்கானமாதிரி மொழிபெயர்ப்பு போய் விடுவதுண்டு.

கு. ப. ரா. மொழிபெயர்ப்பை அழகாகச் செய்திருக்கிறார் என்று சொல்வது தவறாகும். ஏனென்றால் 'இரட்டை மனிதன்' ஒருமொழி பெயர்ப்பென்றே சொல்ல முடியாது. ஸ்டீவன்ஸன் எழுதிய முதல் நூலே இதுதான் என்று தமிழர்கள் சண்டைபோடும்படி இருக்கிறது இந்தப் புஸ்தகம்.

முதல் நூலின் உணர்ச்சியும் தாத்பர்யமும், சிறிதளவேனும் குறையாமல் நவரத்தினக் கற்கள் போன்று வார்த்தைகள் அமைந்திருப்பது உண்மையில் ஆச்சர்யமாகத்தான் இருக்கிறது. கு. ப. ரா. தன் முன்னுரையில் ஸ்ரீ. ஸ்டீவன்ஸனின் 'வாக்கியச் செட்டைப்' பற்றிக் கூறுகிறார். ஆனால் கு. ப. ரா. வின் 'வார்த்தைச் செட்டைப்'பற்றி யார் குறிப்பிடுவது? மொழி பெயர்ப்பின் நடையில் புது மாப்பிள்ளை கம்பீரமாகத் தலை நிமிர்ந்து களிப்புடன் பவனி வரும் அழகைக் காண்கிறோம்.

"ஒருநாள் குளிரற்ற இரவு. வானத்தில் லேசாகப் பனி; தெருக்கள் நாட்டிய மேடைகளைப்போலப் பரிசுத்தமாக இருந்தன. காற்றில்லாததால் அலையாமல் நின்ற விளக்கு ஜ்வாலைகள் ஒரே தினுசான வர்ண விஸ்தரிப்பைச் செய்துகொண்டிருந்தன. பிறை, காற்றால் சாய்த்துவிடப் பட்டது போலக் கிடந்தது. ஒளியை ஊடே காட்டி, வெகு வேகமாக மிதந்து சென்றது மேகத் துண்டு"—இதுபோன்ற கம்பீரமான வர்ணனைகள் புத்தகத்தை அழகு படுத்துகின்றன.

"உள்ளே போகும் வழியில்" ஆசிரியர் இந்த நவீனத்தைப் பற்றி ரஸமான ஆராய்ச்சியை எழுதியிருக்கிறார். டாக்டர் ஜெகிலும் மிஸ்டர் ஹைடும் மனிதனின் இருகுணங்களைக் காண்பிக்கிறார்கள். உயர் குணங்களுக்கு ஜெகில் பிரதிநிதி. அசுர குணங்கள் ஹைட் உருவம் கொண்டிருக்கின்றன. இந்தக் குணங்களுக்குள் எழும் போரையும் அதன் தாத்பரியத்தையும் காண்பிக்கிறது இந்த நவீனம். உன்னத குணங்கள் படைத்த ஜெகிலின் அழிவைப் பற்றி ஆசிரியர் கூறுவதைக் கேளுங்கள். "மனிதன் உண்மையில் ஒருவனல்லன். இருவர். நன்மை தீமை இரண்டும் மனித சுபாவத்தின் அம்சங்களான போதிலும், தீமை எக்காலத்திலும் தனியாக நிற்க முடியாது. நன்மை பெரியது; தீமை சிறியது. தீமையைப் பெரிதாக்கினால் ஆத்ம நாசம்தான்" என்று கூறுகிறார்.

உயர்ந்த ஆத்மார்த்திகப் படிப்பினையைப் புகட்டும் இந்த நவீனம் ஒவ்வொரு தமிழன் உள்ளத்தையும் கிளறி சிந்தனையிலாழ்த்தும் என்பதில் சந்தேகமில்லை.

வே. சு. ரா.

## சிதம்பரம் சுதேசிப் பொருட் காட்சி நினைவு மலர்

இரண்டணா விலையுள்ள இந்த மலரில் சிறந்த விஷயங்கள் அடங்கி யிருக்கின்றன. தமிழ்நாட்டின் பிரபலஸ்தர்கள் பலர் இதில் எழுதி யிருக்கிறார்கள். ஸ்ரீ தேசிக விநாயகம் பிள்ளையும் நாமக்கல் ராமலிங்கம் பிள்ளையும் கவிதைகள் எழுதி யிருக்கிறார்கள். வ. ரா. காந்திஜியைப்பற்றி எழுதி யிருக்கிறார். ஜே. ஸி. குமரப்பா, டாக்டர் நாராயணசாமி நாயுடு, ஸ்ரீ பக்தவத்சலம், ஸ்ரீ முத்துரங்க முதலியார், ஸ்ரீ அய்யாமுத்து முதலியவர்கள் எழுதியிருக்கும் கட்டுரைகள் குறிப்பிடத்தக்கன.